குழந்தைகள் பத்திரிகை

21-12-1975

60 காசு

கோகுலம்



கோகுலம்

மலர் 4 ❀ இதழ் 19

டிசம்பர் 21, 1975

ராட்சஸ, மார்கழி 6


உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்


சந்தா விகிதம்
இந்தியா

ஒரு வருடம்	ரூ. 15.00
ஆறு மாதம்	ரூ. 7.50

இதர வெளிநாடுகள்

ஒரு வருடம்	ரூ. 33.00
ஆறு மாதம்	ரூ. 16.50





கோலங்கள்

கோலம் போடத் தெரியுமா உங்களுக்கு? பெண் குழந்தைகள் அவசியம் கற்றுக் கொள்ள வேண்டிய கலையாயிற்றே? மார்கழி மாதம் தினமும் தெரு வாசலில் விதம் விதமான கோலங்களைப் போட்டு அதன் நடுவே பறங்கிப் பூக்களை வைக்கும் அழகு நம் தமிழ் நாட்டுக்கு மட்டுமே உரித்தான மங்கலக் காட்சிகளாயிற்றே? பொட்டும் புள்ளியும் வைத்துப் போடும் கோலங்கள் எத்தனையோ உண்டு. கைநிதானமும், லாகவமும், கணக்கும் கோலம் போடத் தெரிந்த குழந்தைகளுக்குக் கைவந்த கலைகளாக விளங்கும். சட்டென்று வீட்டு வாசலில் போட இங்கு சில எளிய கோலங்கள் உள்ளன. —எம். சாந்தா





குருபக்தி

கே. ஆர். கிருஷ்ணமாச்சாரி

குழந்தைகள் தங்கள் ஆசிரியர்களிடம் பணிவாகவும், அன்பாகவும் நடந்து கொள்ள வேண்டும். இதைத்தான் நமது முன்னோர்கள் குரு பக்தி என்று குறிப்பிட்டார்கள். சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஸ்ரீ வேங்கடரமணர் என்பவர் தமது ஸத்குருவாய் விளங்கிய ஸ்ரீ தியாகராஜரிடம் எப்படிப் பக்தி உடையவராக விளங்கினார் என்பதைப் பாருங்கள்.

திருவையாறில் தியாகராஜரின் வீட்டில் எப்பொழுதும் பஜனையும் பக்தியுமாக இருக்கும். பாமரர் முதல் பாராளும் மன்னர் வரை எந்தவித வித்தியாசமுமின்றி தியாகராஜரின் இனிய கானத்தைக் கேட்கப் படையெடுப்பர். திருவையாறிலிருந்து ஏழு மைல் தூரத்தில் உள்ளது அய்யம்பேட்டை என்னும் ஊர். அங்கு வாழ்ந்து வந்தார் வேங்கடரமணர். இளவயதினரான வேங்கடரமணரும் சுவாமிகளின் வீட்டில் நிகழும் பஜனைகளில் தவறாது கலந்து கொள்வார். அதற்கென்றே ஏழு மைல் நடந்து வருவார். தமது குருவாக தியாகராஜரைத் தாமே வரித்துக் கொண்டார். குருவின் மீது பக்தி கொண்ட அவருடைய உள்ளம் அவருக்குத் தொண்டு புரிய விரும்பியது. பக்தி சிரத்தை கொண்ட வேங்கடரமணருக்குச் சுவாமிகளின் தேவை நன்கு புலப்பட்டது. தியாகராஜசுவாமிகளின் பூஜைக்கு மிகத் தேவையானது துளசி தளங்கள். அதனை அக்கறையுடன் பறித்துக் கொண்டு வந்து சுவாமிகளின் வீட்டுத் திண்ணையில் வைத்துவிட்டு வந்த சுவடு தெரியாமல் செல்லும் பழக்கம் கொண்டவரானார் வேங்கடரமணர். தியாகராஜரின் சீடர்களும் அதனை யெடுத்துச் சென்று குருவிடம் சமர்ப்பிப்பர்.

பல நாள் இப்படியே நடந்து கொண்டிருந்தது. ஒரு நாள் அன்று வழக்கமாக இருக்கும் துளசிப் பொட்டலத்தைத் திண்ணையில் காணவில்லை. சீடர்களுக்கு ஒரே ஏமாற்றம். தங்கள் குரு கேட்டால் என்ன பதில் கூறுவது என்று திகைத்தனர். இது நாள் வரை வேங்கடரமணரின் தொண்டினை அறிய இயலாத தியாகராஜர் தமது சீடர்களிடம் தீர விசாரித்து அறிந்து கொண்டார். நாள்தோறும் அய்யம் பேட்டையிலிருந்து திருவையாற்றுக்குச் சுமார் ஏழு மைல் தூரம் கால் நடையாக நடந்து துளசி பொட்டலத்தைக் கொண்டு வந்து தரும் வேங்கடரமணர் அன்று உடல் நலமில்லாததால் வர முடியவில்லை என்று அறிந்தார். வேங்கடரமணரின் அரிய தொண்டினையும், பக்தியையும் அறிந்து உள்ளம் உருகினார். மறுநாள், முன் தினம் துளசிப் பொட்டலம் கொண்டு வர இயலாமைக்கு மன்னிப்பு வேண்டி நின்ற வேங்கடரமணரை உள்ளம் உருகிப் பாராட்டினார். தமது சீடர்களில் ஒருவராக அவரையும் ஏற்றுக் கொண்டார். அதன் பின்னும் வேங்கடரமணர் அந்த துளசி கொண்டு வரும் வழக்கத்தை விடாமல் தொடர்ந்து செய்து வந்தார்.

ஒரு முறை வழக்கம் போல் குருவினிடம் சமர்ப்பிக்கத் துளசி தளங்களை ஒரு பூக்குடலையில் எடுத்துக் கொண்டு அய்யம்பேட்டையிலிருந்து புறப்பட்டார் வேங்கடரமணர். ரமணரின் மகிமையை வெளிப்படுத்த இறைவனின் திருவிளையாடல் போல் அன்று வேங்கடரமணருக்கு ஒரு சோதனை ஏற்பட்டது. அய்யம்பேட்டையிலிருந்து திருவையாறு வந்து சேர ஆற்றைக் கடந்து வருவது வழக்கம். எப்பொழுதும் நதியில் கொஞ்சமாகத் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கும். எனவே கடந்து வருவது சுலபமாக இருக்கும். ஆனால் அன்றோ நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றின் மறு கரையிலிருந்த வேங்கடரமணர்



அட்டையில் :

ஏசு என்னும் தெய்வமகன் இங்கு பிறந்தான் – தன்னை
ஏசுகின்ற எதிரிகட்கும் அன்பு சுரந்தான்
நேசமிக்க புதியஉலகம் தந்த பெருமான் – அதில்
நேர்த்தியோடு வாழும் பேரை வாழ்த்த வருவான்


வண்ணப் படம் : ஹரலிங்கம்.

-குடுக்கையார்

நதியில் பெருகி ஓடும் வெள்ளத்தைப் பார்த்து ஒரு கணம் மலைத்து நின்றார். ஆனால் குருவின் மீது கொண்ட அவரது பக்தி, வெள்ளமாகி ஆற்றின் வெள்ளத்தை எதிர்த்து எதிர் நீச்சல் போட்டது. சிறந்த உடற்கட்டும், ஹட யோகப் பயிற்சியும் பெற்றவர் வேங்கட ரமணர். சோதனையில் வெற்றி பெற்று உரிய நேரத்தில் துளசி தளங்கள் கொண்ட பூக்குடலையைச் சமர்ப்பித்தார். பூக்குடலையை முதுகினில் கட்டிக் கொண்டு ஆற்று வெள்ளத்தில் எதிர் நீச்சல் அடித்துத் திருவையாற்றில் தியாகராஜரது வீட்டை அடைந்தார். பூஜை நேரத்தில் துளசி தளங்கள் வழக்கம் போல் சேர்ந்தது. வெள்ள நீர் சொட்டச் சொட்ட நனைந்து காணப்பட்ட வேங்கடரமணரையும் அதே சமயம் ஈரமே படாத பூக் குடலையையும் கண்ட தியாகராஜ சுவாமிகள் சீடரின் மகிமை அறிந்து அகமகிழ்ந்தார். மனமார ஆசீர்வதித்தார்.

வேங்கடரமணரின் முழுப் பெயர் அய்யம்பேட்டை ஸ்ரீமத் வேங்கடரமண பாகவத ஸ்வாமிகள் என்பதாகும். இவர் பெயரோடு ஊர்ப்பெயரும் சேர்ந்துவிட்டது. இந்தச் சீடர் தான் பின்பு குருவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகித் தலைமைச் சீடராகக் குருவாலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டார். ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் தாம் பூஜித்த ஸ்ரீராமபிரானின் விக்கிரகத்தையும் மற்றும் தமது படைப்புக்களையும் தமது நம்பிக்கைக்குப் பாத்திரமான இந்தச் சீடரிடம் தான் ஒப்படைத்து மறைந்தார். இன்றும் தியாகராஜர் பூஜித்த ஸ்ரீராம விக்கிரகம் இவரது வமிசத்தவர்களிடம் இருந்து பூஜிக்கப்பட்டு வருகின்றது. நமது முன்னோர்களின் வழியில் நின்று நாமும் நமது ஆசிரியர்களிடம் பணிவாகவும், அன்பாகவும் நடந்து கொள்ள வேண்டும்.






கிறிஸ்துமஸ் நட்சத்திரம்

செய்து பாருங்கள்

கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு அலங்காரம் செய்பவர்கள் இம்மாதிரியான நட்சத்திரங்களைச் செய்து கிறிஸ்துமஸ் மரங்களிலும் வீட்டின் கூடத்திலும் தொங்க விடலாம். மற்றவர்களும்கூட இம்மாதிரியான 'ஸ்டார்'களைச் செய்து அலங்காரமாகவும், அழகுக்காகவும் கட்டி வைக்கலாம். இதற்கு வேண்டியதெல்லாம் 'கூல் டிரிங்க்' சாப்பிடக் கொடுப்பார்களே 'ஸ்ட்ரா' அதில் பத்து. ஒரு மெல்லிய நூல் கண்டு. கத்தரிக்கோல், வர்ண ரிப்பன், தங்க நிற பெயிண்ட் — இவ்வளவுதான்.


ஆறு அங்குல நீளத்தில் இருபது நூல் துண்டுகளை வெட்டி வைத்துக் கொள்ளுங்கள். இதற்கு ஆறு அங்குல நீளமுள்ள அட்டையில் நூலைப் பத்துத் தடவை சுற்றி (A) இரு முனைகளிலும் வெட்டினீர்களானால் (B) ஆறு அங்குலத் துண்டு நூல் இருபது கிடைத்துவிடும். இதைத் தவிர ஒரு அடி நீளத்தில் இரு துண்டு நூலை வெட்டி வைத்துக் கொள்ளுங்கள்.

இனி, 'ஸ்ட்ரா' ஒவ்வொன்றையும் நடு மையத்தில் வளைத்து மடித்துக் (1) கொள்ளுங்கள். இப்படி மடித்த ஸ்ட்ராக்களில் ஐந்தை மேஜை மீது அவற்றின் 'V' அமைப்பு ஒன்றுக்குள் (2) ஒன்று படியுமாறு வையுங்கள். இந்த ஐந்து ஸ்ட்ராக்களின் நடு மையத்தையும் இரு விரல்களால் அழுத்தி அமுக்கித் தூக்கி (3) ஒரு அடி நீளமுள்ள ஒரு நூலினால் நடு மையத்தில் இறுக்கிக் கட்டி முடி (4) போடுங்கள். நட்சத்திரத்தின் கதிர்களைப் பிரித்து (5) விடுங்கள். ஒரு நட்சத்திரம் ரெடி. இதே முறையில் இன்னொரு நட்சத்திரத்தையும் மீதமுள்ள ஐந்து ஸ்ட்ராவினால் உருவாக்கிக் கொள்ளுங்கள். ஒரு நட்சத்திரத்தின் மீது மற்றொரு நட்சத்திரத்தை (6) வையுங்கள். இரண்டு நட்சத்திரத்திலும் நடு மையத்தில் கட்டிய கட்டுக்களில் கொஞ்சம் கொஞ்சம் நூல் மீதமிருக்கிறதில்லையா? இப்போது இரு



நட்சத்திரங்களையும் பல முறை அழுத்திக் கட்டி முடி போட்டு மீதமுள்ள நூலை வெட்டி அகற்றிவிடுங்கள். மேல் கீழ் நட்சத்திரங்களின் கதிர்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து இருக்குமாறு நீவி நீட்டிச் சீராக்குங்கள். பத்துக் கதிர்கள் (கைகள்) இருக்குமில்லையா? தயாராக உள்ள ஆறு அங்குலத் துண்டு நூல்கள் இருபதிலிருந்து பத்துத் துண்டு நூல்களை எடுத்துக்கொள்ளுங்கள். இனி, ஒவ்வொரு கதிரிலும் நடுமையத்திலிருந்து ஒன்றரை அங்குலம் தள்ளி; துண்டு நூலினால் அங்கு இறுக்கிக் கட்டி இரட்டை முடி (7) போடுங்கள். ஒவ்வொரு கதிரிலும் (கையிலும்) இதே மாதிரி ஒரே சீரான அளவில் இடத்தில் கட்டுங்கள். இப்போது கட்டுண்ட ஸ்ட்ராக்களினால் ஒரு வட்டம் (8) ஏற்பட்டிருக்கும். ஒவ்வொரு கதிரின் முனையையும் முடி போட்ட இடத்தில் இரண்டாகப் பிரித்து விடுங்கள்.


இனிமேல்தான் நட்சத்திரத்தை உருவாக்கும் கடைசிக் கட்டம். மீதமுள்ள பத்துத் துண்டு நூல்களுக்கும் வேலை. நட்சத்திரத்தின் ஒவ்வொரு கையிலும் இரு முனைகள் இருக்கிறதில்லையா? ஒரு கையின் ஒரு முனையையும் அடுத்துள்ள கையின்ஒருமுனையையும் சேர்த்துக் கொஞ்சம் இடைவெளி விட்டுத் துண்டு நூலினால் முடி போடுங்கள். உதாரணமாக B முனையை C முனையோடும், Dயை Eயுடனும் Fஐ Gயுடனும் இப்படியே எல்லாக் கைகளின் முனைகளையும் (9) இணைத்துவிடுங்கள். இப்படி








இணைப்பதில் மேல் கை, கீழ்க் கை என்று மாறி மாறியும் இணைக்கலாம் அல்லது கீழ் கீழோடும் மேல் மேலோடும் இணைக்கலாம். எல்லாக் கைகளின் முனைகளையும் இணைத்தானதும் பத்து முனைகளுள்ள அழகான நட்சத்திரம் கிடைக்கும். நீட்டிக் கொண்டிருக்கும் அதிகப்படி நூல்களை வெட்டி அகற்றுங்கள். தங்க நட்சத்திரமாக ஜ்வலிக்க அதன் மீது தங்க நிறப் பெயிண்டைப் பூசவோ ஸ்ப்ரே செய்யவோ வேண்டும். பெயிண்ட் காய்ந்ததும் பளபள ரிப்பனில் ஒரு லூப் உண்டாக்கிக் கட்டித் தொங்க (10) விடுங்கள். இப்படிப் பல நட்சத்திரங்களை உருவாக்கி, ஊசலாட விட்டால் அழகாக இருக்காதோ!


— எம். சாந்தா














வாயுள்ள பிள்ளை

கண்மணி லட்சுமி

"அம்மா, ஸ்கூல் பீசும் கட்ட முடியலே. புத்தகமும் வாங்க முடியலே. யூனிபாரமும் இல்லே. நான் எப்படிப் பள்ளிகூடம் போய்ப் படிக்கிறது? பேசாம பள்ளிக்கூடத்தை விட்டு நின்னுக்கறேன். எங்காச்சும் வேலைக்குப் போறேன்" என்றான் மணி வருத்தத்தோடு. குடும்ப நிலையை அனுசரித்துப் படிப்பை நிறுத்திவிடத் தீர்மானித்து விட்டான் மணி. பத்து வயது நிரம்பிய மகனின் வருத்தத்தை உணர்ந்து மனம் கலங்கினாள் சீதா.

"ஏண்டா மணி, உனக்கு யாருடா வேலை கொடுப்பாங்க? ஒழுங்காப் படிக்கிறதை விட்டுட்டு இந்த வயசிலேயே வேலைக்குப் போறானும். வேலைக்குப் போக வேண்டாம். ஒழுங்காகப் படிக்கப் போ". குடும்பம் இருக்கிற நிலையில் மகன் மேற்கொண்டு படிக்க முடியாது என்பது நிச்சயமாகத் தெரிந்திருந்தும் ஏதோ சொல்லி வைத்தாள் சீதா.

"ஆமாம், எதைப் படிக்கிறதாம்? ஒரு புத்தகம்கூட வாங்கித் தரலே. ஸ்கூல் பீஸ் கட்டறதுக்கும் வழியில்லே! படிக்கிறதாம்! என்னாலே முடியாது! இத்தனை நாளாத் தவணை சொல்லிக் கழிச்சாச்சு. இப்பவே பள்ளிக்கூடம் திறந்து ரெண்டு மாசமாச்சு! நெறையப் பாடமெல்லாம் நடத்தி முடிச்சிருப்பாங்க. இனிமே நான் ஸ்கூலுக்குப் போய் என்னமாப் படிக்கிறது! என்னாலே முடியாது. நான் வேலைக்குத்தான் போவேன். நீ சரின்னு வேலை இப்பவே ரெடிம்மா!" கண்களில் ஆர்வம் பொங்கக் கெஞ்சினான் மணி.

"வேலை ரெடியா? யாருடா உனக்கு வேலை கொடுத்தாங்க? என்ன வேலை" ஆச்சரியத்தோடு கேட்டாள் சீதா.

"நம்ம ராமையா முதலாளி வீட்டிலே தானம்மா வேலைக்குக் கூப்பிட்டாங்க. செடிகள் இருக்குதாம். அதுகளுக்கெல்லாம் தண்ணி ஊத்தறதுக்கும் பூப் பறிக்கறதுக்கும் பூக்களையெல்லாம் கொண்டு போய் வித்துட்டு வர்றதுக்கும் என்னைச் சம்பளத்துக்குச் சேர்ந்துக்கிறியான்னு கேட்டாங்க."

"சம்பளம் எவ்வளவு தர்றதாச் சொன்னாங்க?"

"மூணு நேரமும் அவங்களே சோறு போடறாங்களாம். அப்புறம் ஏதாவது வீட்டு வேலை. அப்புறம் பூப்பறிக்கிறது, பூ விக்கிறது அவ்வளவுதான். சம்பளம் பத்து ரூபா கொடுக்கிறதாச் சொன்னாங்க. 'நான் எங்கம்மாவைக் கேட்டுச் சொல்றேனுங்க' அப்படின்னு சொல்லிட்டேன்" என்றான் மணி.

நன்றாகப் படிக்கிறவனும் புத்திசாலியுமான தன் மகன் படித்துப் பெரிய உத்தியோகம் பார்க்க வேண்டியவன் பூ விக்கவா சேருவான்? நினைத்துப் பார்க்கவே சீதாவுக்குக் கஷ்டமாக இருந்தது. என்ன செய்வது? வறுமையில் வாழும் குடும்பம். மூன்று குழந்தைகள். கணவனின் சொற்ப வருமானம் அன்றாடக் குடும்பச் செலவுக்கே திண்டாட்டம்.

மணி வேலைக்குச் சேர்ந்து ஒரு வாரம் ஓடிற்று. இடையிடையே ஓய்வு நேரத்தில் வீட்டுக்கு வருவான். பணக்காரர் வீட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளையெல்லாம் வர்ணிப்பான். பிறகு தனக்கு



ஏற்படும் சந்தேகங்களையெல்லாம் அன்னையிடம் கேட்பான்.

திடீரென்று எதையோ நினைத்துக் கொண்ட மணி இப்படிக் கேட்டான்: ''அம்மா, எனக்கொரு உண்டியல் வாங்கிக் கொடேன். அந்தப் பணக்காரங்க சம்பாதிக்கிற மாதிரியே நானும் சம்பாதிக்கப் போறேன்.''

''அவங்க மாதிரி எப்படிடா நீ சம்பாதிப்பே? உண்டியல் எதுக்கு?''

''அதெல்லாம் அப்புறம் சொல்றேன். இன்னைக்குச் சாயந்திரத்துக்குள் ஒரு உண்டியல் வாங்கிக் கொடு. நல்ல உண்டியலா, பூட்டிக்கிற மாதிரி வாங்கிக்கொடு. மறந்திடாதே!'' என்றவன், நேரமாகி விட்டதை உணர்ந்து ராமய்யா வீட்டுக்குப் புறப்பட்டான்.

சம்பளமாகக் கொடுக்க பத்து ரூபாயைக் கொண்டு வந்து அன்னையிடம் கொடுத்தான் மணி. சீதாவுக்கு மிகவும் பெருமையாக இருந்தது. அதே சமயம் வருத்தமாகவும் இருந்தது. 'படிக்க வேண்டிய பிள்ளை சம்பாதிக்கிறதே' என நினைத்துக் கண்கலங்கினாள்.

''ஏம்மா அழறே! சம்பளம் கொஞ்சமா இருக்குதுன்னு? கவலைப்படாதே அம்மா. சம்பளம் இந்தப் பத்து ரூபா மட்டும்தான்னு நினைக்கிறியா? அந்த உண்டியலையும் திறந்து பாரேன். இந்தா சாவி!'' என்றவன் தன் பாக்கெட்டிலிருந்து உண்டியலின் சாவியை எடுத்துக் கொடுத்தான். சீதா உண்டியலைத் திறந்து பார்த்தாள். அவளுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. உண்டியலைக் கீழே கொட்டினாள். எண்ணிப் பார்த்தாள். முப்பது ரூபாய் இருந்தது!

''ஏதுடா இத்தனை காசு?'' சந்தேகத்தோடு கேட்டாள்.

''அம்மா! வாயுள்ள பிள்ளை பிழைக்கும் அப்படின்னு அடிக்கடி சொல்லுவியே! அதனால்தான் இவ்வளவு பணம் சேர்ந்தது. எஜமானர் பருத்தி, தானியமெல்லாம் விக்கிறாங்க இல்லையா? அதை வாங்கின விலைக்கு மேலே நிறைய லாபம் வெச்சு விக்கிறாங்க. சுளுவா லாபம் கிடைக்குது. காசும் நிறையச் சேருது. நானும் பலமுறை பார்த்தேன். நாமும் இப்படிச் செஞ்சா என்னன்னு தோணிச்சு! அவங்க தினமும் கட்டிக் கொடுக்கிற பூவையெல்லாம் முழம் பத்துக் காசுக்கு வித்துட்டு வரச் சொல்றாங்க. ஆனால் நான் அவங்க கொடுக்கிற பூவை முழம் பதினைஞ்சு காசுன்னு அஞ்சு பைசா அதிகம் வைச்சு எப்படியோ வீடு வீடாய்ப் போய் கெஞ்சி வித்துடறேன். அவங்களுக்குப் பத்துப் பைசா கணக்குக்குச் சேர வேண்டிய காசை கொடுத்திடறேன். மீதிக் காசை நான் எடுத்துக்கிறேன். தினமும் காசு சேருது. கையில் இருந்தா செலவு ஆயிடுது. அதனாலே உண்டியல் வாங்கித் தரச் சொன்னேன். தினமும் இப்படிச் சேர்ந்த பணம்தானம்மா இத்தனையாயிருக்கு!'' என்றான் மணி ஆனந்தம் பொங்க.

''ஏண்டா மணி, ராமய்யா வீட்டிலே நீ இப்படி அதிகமா வித்துக்



காக எடுத்துக்கிறதைப் பற்றிக் கேள்விப்பட்டாங்கன்னு தப்பா நெனைக்க மாட்டாங்களா?'' வருத்தத்தோடு கேட்டாள் சீதா.

''தப்பா நினைக்க மாட்டாங்கம்மா'' என்றான் மணி உறுதியாக. பிறகு அம்மா! நம்ம குடும்ப நிலை அவங்களுக்குத் தெரியும் இல்லையா? ஒருநாள் அவங்க என்னை சொன்னாங்க தெரியுமா? 'நாங்க பணம் கொடுக்கிறோம், நீ படிடா மணி! பணத்தைத் திருப்பியும் கொடுக்க வேண்டாம். நீ நல்லாப் படி. பூ விக்கிறதுக்கு வேறு ஆளைச் சேத்துக்கிறோம்' அப்படீன்னாங்க. எனக்குக் கஷ்டமாப் போச்சும்மா. ' ஏன்னா, கஷ்டப்படற நம்ம குடும்பத்துக்காக நானும் சம்பாதனையைத் தேடணும்னுதானே வேலைக்குச் சேர்ந்தேன்? மறுபடியும் நான் படிக்கப் போனா நம் குடும்பம் கஷ்டப்படுமே என்ன பண்ணறதுன்னு ஒண்ணும் புரியாமே வருந்தினேனா? திடீர்னு ஒரு ஐடியா வந்தது. அவங்க இனமாக் கொடுக்கிற பணத்துலே படிக்கறதுக்கும் எனக்குப் பிடிக்கலே. அதனலே நான் அவங்களை என்ன கேட்டேன் தெரியுமா? 'நீங்க சரின்னு சம்மதிச்சிங்கன்னா என்னோட பள்ளிக்கூடத்துச் செலவுக்கு நானே சம்பாதிச்சுக்குவேன்' என்றேன். 'உனக்கு என்ன வேணும்னு கேட்டாங்க. நான் இப்படிச் சொன்னேன்.

'மத்த பூக்காரங்க கட்டி விக்கிற பூவை விட நீங்க கட்டற பூச்சரம் அடர்த்தியா, நல்லா அழகா, இருக்குதுன்னு எல்லாரும் சொல்றாங்க. மத்த பூக்காரங்க எல்லாம் முழம் பதினைஞ்சு காசுக்கு விக்கறாங்க. ஆனால் நீங்களோ முழம் பத்துப் பைசாவுக்கு வித்தாப் போதும்னு சொல்றீங்க. நீங்க சரின்னு சொன்னா அதையே நான் எப்படியாவது பதினைஞ்சு பைசாவுக்கு வித்து முழத்துக்கு அஞ்சு பைசா எடுத்துக்கறேன். என்னோட படிப்புச் செலவையும் அது சரிக்கட்டும் சரிங்களா?'ன்னு கேட்டேன். அவங்களும் என்னைப் பார்த்துச் சிரித்து முதுகிலே தட்டிக் கொடுத்து 'கெட்டிக்காரன்டா நீ. உன் இஷ்டப்படியே செய்'னு சம்மதிச்சுட்டாங்க. அப்புறம் இன்னொன்றும் சொல்லிட்டேன். பள்ளிக்கூடம் போனாலும் நான்தான் தினமும் வந்து பூவை எல்லாம் வித்துக் கொடுப்பேன்னேன். அதுக்கும் சரின்னு சொல்லிட்டாங்க. எப்படி அம்மா என் வேலை? படிப்புக்குப் படிப்பும் ஆச்சு வேலைக்கு வேலையும் ஆச்சு'' என்றான் மணி புன்சிரிப்புடன்.

அவனது அறிவுத் திறமையை நினைத்து மகிழ்ந்த அன்னை அவனை அணைத்து உச்சி முகர்ந்தாள்.

ஈகையே இன்பம்



— கௌசிகன் —

மார்கழி மாதத்திலே மழை பெய்யுமோ? பெருமழை, இரண்டு நாளாக விடவே இல்லை. ஊதல் காற்று உடலைக் குறுக வைத்தது. மைக்கேலுக்கு அது பண்டிகை மாதம். கிறிஸ்துமஸுக்கு இன்னும் ஒரு வாரம் கூட இல்லையே. வானத்தை அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சு விட்டான். இந்தப் பண்டிகையை அவன் எத்தனை நாட்களாக ஆசையோடு எதிர் பார்த்திருந்தான்? இப்படிக் கொட்டுகிறதே மழை

'கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தைப் பாழாக்கி விடுமோ இந்த மழை? இந்த அடைமழை ஆகஸ்ட் மாதத்தில் பெய்தால் என்னவாம்? டிசம்பரில் பனிதான் பெய்யும் என்பார்கள். இந்த வருஷம் ஏனோ இப்படி வானம் பொத்துக் கொண்டது போலக் கொட்டுகிறது. கடலில் ஏதோ காற்றும் அழுத்தமாம். இதெல்லாம் யாருக்குப் புரிகிறது ?'— இப்படி எண்ணமிட்டபடியே ரொட்டிப் பொட்டலத்தைச் சட்டைக்குள்ளாக நுழைத்துக் கொண்டு மழையைக் கிழித்துக்கொண்டு வீட்டை நோக்கி ஓடினான் மைக்கேல்.

மதம் மாறிய கிறிஸ்துவர்கள் அவர்கள். அந்த மலைப் பகுதி ஊரில் இருந்த ஒரு பாக்டரியில் அவன் அப்பா ஒரு தொழிலாளி. மைக்கேலின் அம்மா இறந்ததும் அவனுக்கும் அப்பாவுக்கும் உதவியாக அவன் பாட்டி அவர்களுடன் வசிக்க வந்தாள். பாட்டிக்குக் கண் பார்வை போய் விட்டது, முதுமையினால். ஆனால் எல்லாக் காரியத்தையும் கை நிதானத்திலேயே செய்து விடுவாள்.

கதவின் ஓசை கேட்டே பாட்டி குரல் கொடுத்தாள். ''யாரது? மைக்கேலா? 'பிரட்' வாங்கி வந்தியா?.... சரி. பொழுதை வீணாக்காமப் படி. வெறுமனே பாடிக்கிட்டிருக்காதே. சீட்டி அடிக்காதே!''

மைக்கேலுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் சிரிக்கவில்லை அவனுக்குப் பாட்டென்றால் சாக்லேட் மாதிரி. ஏதாவது ட்யூனை ஹம்மிங் செய்து கொண்டோ விசில் அடித்துக் கொண்டோதான் பாடங்களைப் படிப்பான். அப்படியொரு சங்கீதப் பைத்தியம். அப்படிப்பட்டவனைப் பாடாதே என்கிறாளே இந்தப் பாட்டி. மைக்கேலுக்கு வெகு நாளாக ஓர் ஆசை. இந்தப் பண்டிகையின்போது அப்பாவிடம் நச்சரித்து எப்படியாவது ஒரு 'மௌத் ஆர்க'ன் வாங்கிவிட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தான். ஞாயிற்றுக் கிழமை தோறும் சர்ச் மைதானத்துக்கு வரும் டேவிட்டின் தள்ளு வண்டியில் ஒரு பளபளப்பான மௌத் ஆர்கனைப் பார்த்து வைத்திருந்தான் மைக்கேல். ஆறு ரூபாயோ ஐந்து ரூபாயோதான் அது. அதை நினைக்கும்போதே அவன் நெஞ்சு ஜில்லென்று ஆகியது. உதடுகளும் விரல்களும் பரபரத்தன. அதை வாங்கிவிட்ட மாதிரியும், உதடுகளுக்கிடையேபொருத்திக் காற்றை இழுத்து இனிமையாக மீட்டி நீட்டி ஒலி எழுப்புவது போலவும் பாவனை செய்து மகிழ்ந்து போனான்.

அப்போது பாட்டியின் குரல் கேட்டது. ''மைக், அப்பா பண்டிகையைப் பற்றி உன்னிடம் பேச வேண்டுமென்றார். இந்த வருஷம் பாக்டரியில் போனஸ் கிடையாதாம். பண்டிகை கேக், ப்ரூட்ஸ் இதெல்லாம் வாங்குவதே சிரமம்தான். ஆனால் உன் அப்பா எப்படியும் உனக்கு அதெல்லாம் இல்லாமல் வைக்க மாட்டார். ஆனால் பரிசு என்று எதுவும் அவரைக் கேட்டு நீ தொந்திரவு செய்யாதே தெரிந்ததா?'' என்றாள். மைக்கேலுக்குத் தொண்டையை அடைப்பது போலிருந்தது. ''பாட்டி! மௌத் ஆர்கன் வாங்கித் தரச் சொல்லணும்னு எத்தனை ஆசையாயிருந்தேன் நான்? டேவிட்டோட தள்ளு வண்டிக் கடையிலே பார்த்துப் பார்த்து விலை கேட்டு வைச்சிருந்தேன்.'' ஏக்கப் பொருமலுடன் கூவினான் மைக்கேல்.

அவனுக்கு அழுகையாக வந்தது. ''ஏன் பாட்டி. உனக்கு....நீ.... எதுவுமே வேணும்னு நினைக்க மாட்டியா?



உனக்குன்னு ஆசைகளே கிடையாதா?'' என்று ஏதோ தாபத்துடன் கேட்டான்.

''ஆசை இல்லாத மனுசங்க யாருப்பா? எனக்குக்கூட ஆசைதான்; என்னுடைய தோத்திரப் புத்தகத்தை (பைபிள்) கைகளிலே அணைத்து அழுத்திப் பிடிச்சு வைச்சுக்கணும்னு.''

''பின் ஏன் அதை அந்த மேரி மாமிக்குத் தானமாகக் கொடுத்தியாம்?''

''பாவம் அவளும் அவள் புருசனும் தங்களோட ஒரே அருமைக் குழந்தையை இழந்த துக்கத்திலே இடிஞ்சு போயிருந்தாங்க. அவளுக்கு அது தேவையாக இருந்தது. கொடுத்தேன்.''

''கொடுக்காட்டியும் கூட உன்னுலே தான் படிக்க முடியாதே.''

''படிக்க முடியா விட்டால்என்ன? பைபிள் என் கைகளிலே இருந்தாலே போதுமே.'' மைக்கேலுக்குச் இந்த வாதம் புரியவில்லை. ''சரிசரி...அப்பாவிடம் நான் ஒண்ணும் பரிசு கொடுக்கச் சொல்லிக் கேக்கலே. போதுமா?'' என்று கூறியபடி சீட்டி யடித்துக் கொண்டே நகர்ந்தான். இருந்தாலும் அவன் உள்ளத்தில் உற்சாகம் இல்லை.

பண்டிகைக்குப் புதிய ஆடைகள் வாங்குவதற்காக அப்பாவுடன் கடை வீதிக்குப் போயிருந்தான் மைக்கேல். இன்னமும் மழை ஓயவில்லை. கிறிஸ்துமஸுக்கான இடைவெளி குறைந்து கொண்டே வந்தது. கடையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தபோது அவன் அப்பா கூறினார்: ''மைக்கேல் உன்னோடு ஒரு விஷயம் பேச வேண்டும்.''

''எனக்குத் தெரியும். பாட்டி சொன்னாள். இந்த வருஷம் கிறிஸ்துமஸுக்குப் பரிசுகள் ஏதும் கிடையாது. அதுதானே? தேவையில்லை.''

தன் தகப்பனாரின் பிடி தன் தோளில் இறுகுவதை உணர்ந்தான் மைக்கேல். ஆனால் கொஞ்ச நேரம் வரை அவர் பேசவில்லை. அவன் மனம் தடதடத்தது.

''உன் பாட்டி சொன்னாள், நீ ஒரு மௌத் ஆர்கனை டேவிட்டின் வண்டியில் பார்த்து வைத்திருப்பதாக...''

''அது சின்னக் குழந்தையோட விளையாட்டுச் சாமான். எனக்கொன்றும் வேண்டாம்''. சாதாரணமாய் இருப்பது போல் பாவனை செய்தான் மைக்.

சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு அவன் அப்பா கூறினார்: ''மைக்கேல்! நீ தண்ணீர் ஊற்றி வளர்த்ததுதானே நம் தோட்டத்து முருங்கை மரம்? அதன் காய்களைக் கறிகாய்க் கடைக் கேசவனுக்குப் போன வாரம் கொடுத்தேன். அதற்கு அவன் ஆறு ரூபாய்கள் கொடுத்தான். அது உன் பணம். ஆகவே உன் கிறிஸ்துமஸ் பரிசை உன் பணத்தில் நீயே வாங்கிக் கொள்ளலாம், கவலைப்படாதே'' என்றார். மைக்கேலுக்கு நெஞ்சு பொங்கியது. மகிழ்ச்சியால் மலர்ந்த விழிகளால் மௌனமாக அப்பாவைப் பார்த்தான்.

மழை விடவே யில்லை. ஆற்றிலே இரு கரையையும் தொட்டுக்கொண்டு ஓடியது வெள்ளம். இந்த மழையில் வண்டியைத் தள்ளிக்கொண்டு டேவிட் வரவேபோவதில்லை. இதை எண்ணும் போது மைக்கேலுக்கு மழையின் மீது ஆத்திரமாக வந்தது. கிறிஸ்துமஸுக்கு இன்னும் இரண்டே நாட்கள்தான் இருந்தன. அன்று அவன் அப்பா தொழிற்சாலையிலிருந்து சீக்கிரமே திரும்பி விட்டார். மழைக் கோட்

டைக் கழற்றித் தண்ணீரை உதறிக் கொண்டே, ''மைக், தன் வண்டியோடு டேவிட் சந்தைப் பேட்டை மைதானத்தில் இருக்கானும். நீ சுற்று வழியில் போறதானா ரெட்டியார் பாலத்து வழியாய்ப் போய் இருட்டறதுக்குள்ளே திரும்பலாம்'' என்றார். அந்தக் கிராமத்துக்கு டேவிட்டின் வண்டிதான் டிபார்ட்மெண்டல் ஸ்டோர். அவன் வண்டியில் குழந்தைகளுக்கான எவ்வளவோ அபூர்வமான சாமான்கள் எல்லாம் இருக்கும். குடும்பம் நடத்த வேண்டிய சாமான்களுக்கு அந்தக் கிராமத்தில் கடைகள் உண்டு. ஆனால் குழந்தைகளுக்கான பொருள்களுக்கு டேவிட்டின் வண்டியைத் தவிர கடைகள் ஏதும் கிடையாது. அவன் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள் குழந்தைகள்.

துள்ளி எழுந்தான் மைக்கேல். அவன் பார்த்துப் பார்த்து வைத்த மௌத் ஆர்கன் அவனுக்கே அவனுக்குச் சொந்தமாகப் போகிறது.

''ஜாக்கிறதை!'' எச்சரித்தார் அவன் அப்பா. ''ஆற்றை நீந்திக் கடந்து போகக் கூடாது, தெரிந்ததா? ஏசு மீது ஆணையாக, என்ன?''

'' சரிப்பா. கடவுள் சாட்சியாக'' என்று கூவியபடியே வீட்டை விட்டு வெளியேறி மழையினுள் புகுந்து மறைந்தான் மைக்கேல்.

அது சுற்றுப் பாதைதான். அப்பாவுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றினான் அவன். சந்தைப்பேட்டை மைதானத்தை அடையும்போது அந்த மழையிலும் அவனுக்கு மூச்சு இறைத்தது. அதைக் கண்ட டேவிட் சிரித்தான். ''மைக்கேலு! ஏன் இப்படி அவசரம். நான் இன்னும் ரெண்டு நாள் இங்கேயே தான் காம்ப். மழை ஓயவில்லையே!''

''என் மௌத் ஆர்கன்...'' மூச்சு வாங்க, முகத்து நீரைத் துடைத்தபடி கேட்டான் மைக்கேல். ''அதை யாருக்காவும் வித்துட்டியா?''

''உன்னோடதாச்சே விப்பேனா...? இதோ!'' ஈரக்கைகளால் அதை வாங்கிக்கொள்ளவே மனசில்லை மைக்கேலுக்கு. மழைத் துளி பட்டுவிடாமல் சட்டென்று அதைத் தன் டிராயர் பைக்குள் திணித்துக் கொண்டான். தயாராக வைத்திருந்த பணத்தை எண்ணி டேவிட்டிடம் கொடுத்தான்.

'' உங்கிட்ட பைபிள் புத்தகம் இருக்கோ?'' என்று கேட்டான். டேவிட் தன் வண்டியின் அடியிலிருந்த ஒரு பெட்டியைக் காட்டி, ''இருக்கு. கைக்கு அடக்கமான உயர்ந்த பதிப்பு. தோல் அட்டை போட்டது. அதுவும் ஆறு ரூபாதான். வேணுமா?''

''இல்லே, கேட்டேன்'' என்று கூறியபடியே மறுபடி மழையை ஒதுக்கி உதைத்துக் கொண்டு வீட்டை நோக்கி ஓடலானான் மைக்கேல்.

எவர் சில்வர் தகட்டினால் மூடி இருந்த பளபளக்கும் அந்த மௌத் ஆர்கனின் அழகை, அமைப்பைப் பாராட்டினார் அவன் அப்பா. பாட்டி விரல்களால் அதன் வழுவழுப்பைத் தடவிப் பார்த்தாள். பிறகு அவனிடமே கொடுத்தாள். மைக்கேல் உடனே



அதைத் தன் உதடுகளுக்கிடையே பொருத்தி இசை எழுப்புவான் என்றே அவர்கள் எண்ணினார்கள். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. ''நாளைக்குத் தானே பண்டிகை? பண்டிகைக்கு முன் மாலை (கிறிஸ்துமஸ் ஈவ்) அன்று பாடிக் காட்டுகிறேன்'' என்று அதைக் கொண்டு போய்ப் பத்திரப்படுத்தி வைத்து விட்டான்.

மறுநாள் பொழுது விடிந்தது. இன்னும் மழை பெய்து கொண்டுதானிருந்தது. உற்சாகமில்லாத சூழ்நிலை. மைக்கேலின் அப்பா காலையிலேயே எழுந்து எங்கோ போயிருந்தார். காலை ஆகாரத்தின்போது பாட்டி சொன்னாள்: ''இன்று நள்ளிரவில் மைக்கின் மௌத் ஆர்கன் இசைதான் பண்டிகைக்கு எங்களையெல்லாம் எழுப்பப் போகிறது. இல்லையா மைக்? நீ விரும்பியபடியே உனக்கு உன் பரிசு கிடைத்ததில் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி'' என்றாள் பாட்டி.

சட்டென்று மைக்கேலின் உள்ளத்தில் ஏதோ ஒன்று புரண்டு கொடுத்தது. ''பாட்டி, நான் கொஞ்சம் வெளியே போய்விட்டு வரேன். அப்பா கேட்டால் சொல்லு.''

''எங்கேப்பா இந்த மழையிலே போகப் போறே?'' பாட்டிக்குப் பதிலாகக் கதவு படீரென்று மூடும் ஒலி தான் கேட்டது. மைக்கேல் மழையில் ஓடிக் கொண்டிருந்தான்.

அந்த ஆறு அப்படி ஒன்றும் பெரிய ஆறு அல்ல. ஆனால் ஆழமானது. இந்த அடை மழையில் அது ஆக்ரோசம் கொண்ட ராட்சதனைப் போல வெறி கொண்டு ஓடிக் கொண்டிருந்தது. இந்த வெள்ளத்தில் ரெட்டியார் பாலம் கூட மூழ்கியிருக்குமே! மைக்கேலின் கண்கள் சட்டென்று ஒளி விட்டன. சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய ஆலமரம் வேரோடு பெயர்ந்து ஆற்றின் குறுக்கே விழுந்திருந்தது. அதன் கிளைகள் மறு கரையைத் தொட்டுக் கொண்டபடி இருந்தன. மைக்கேல் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான். அந்த மரத்தின் வழியாக ஆற்றைக் கடப்பது அவன் திட்டம். 'நான் அப்படி ஒன்றும் கனமில்லையே?' மரமும் பாதி மூழ்கியும் பாதி நீரின் மேலாக மிதந்த படியும் ஆடிக் கொண்டிருந்தது.. மெள்ள மெள்ளக் கிளைகளைப் பற்றிக் கொண்டு அடி அடியாக முன்னேறி அக்கரையை அடைந்து விட்டான், மைக்கேல்.

போன காரியத்தை முடித்துக் கொண்டு திரும்பிக் கொண்டிருந்தான் வேக வேகமாக. தூரத்திலேயே அந்த மரத்தைப் பார்த்துக் கொண்டான். 'நல்ல வேளை. அது அப்படியே அங்கேயே இருக்கிறது. வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படவில்லை' மகிழ்ச்சியோடு அந்தப் படுகைப் பாதையில் ஓடிவந்தான் மைக்கேல். அதே சமயம் சொல்லி வைத்தாற்போல் அவனுக்காகவே காத்திருந்தது போல எதிர்க் கரையில் தட தடவென்று ஓர் ஓசை கேட்டது. அந்தப் பெரிய ஆலமரத்தின் வேர்ப் பிடிப்பு வெள்ள நீரினல் அரிக்கப்பட்டு மண் சரிந்து ஆற்றின் குறுக்காகக்கிடந்த அத்தனை பெரிய மரம் சடசடவென்று நீரினுள் மூழ்கி ஆற்றுப் போக்கோடு மிதந்து சென்றது. மைக்கேல் அப்படியே பிரமை பிடித்தவன் போல் அக்கரையில் நின்முன். 'இன்னும் கொஞ்ச நேரம் அந்த மரம் அங்கிருக்கக்கூடாதா? 'ஹோ' என்ற இரைச்சலுடன் ஆற்று வெள்ளம் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே ஓடிற்று.

* * *

வீட்டுக்குள் நுழைந்தபோது மைக்கேலின் அப்பா அவனை எதிர்பார்த்து அவனுக்காகவே காத்திருந்தார்.

''எங்கே போயிருந்தாய்?'' அவர் குரல் மிக மிக அமைதியாக ஒலித்தது. அந்த அமைதியே பயங்கரமாகவும் இருந்தது.

''சந்தைப்பேட்டை மைதானத்துக்கு...'' அப்பாவின் கால்களைப் பார்த்தபடி பதில் கூறினன் மைக்கேல்.

'' ஆற்று வெள்ளத்தை அதன் குறுக்கே விழுந்து கிடந்த மரத்தின் மூலமாகக் தானே கடந்து போனய்?''

''ஆமாம்...''

''எனக்குக் கொடுத்த வாக்கை நீ காப்பாற்றவில்லை. கர்த்தர் மீது ஆணையிட்டுக் கூறினய் இல்லையா?''

மைக்கேல் மௌனமாக பிளாஸ்டிக் உறையிட்ட ஒரு பாக்கெட்டைத் தன் டிராயர் பையிலிருந்து எடுத்து அப்பாவிடம் நீட்டிக் கொண்டே ''டேவிட் வண்டியைக் கிளப்பிட்டுப் போயிட்டா என்ன செய்யறதுன்னு...'' என்முன்.

அவன் நீட்டிய பொருளை வாங்கி அதையே சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்தார் அவன் அப்பா. தன் மௌத் ஆர்கனைக் கொடுத்து விட்டு அதற்குப் பதிலாக இதை வாங்கி வரப் போயிருக்கிறுன் தன் மகன் என்பதைப் புரிந்துகொள்ள அவருக்கு அதிக நேரமாகவில்லை. அவர் கண்களில் நீர் திரளலாயிற்று. ஆனாலும் கரகரத்த குரலில் ''இனிமேல் இம்மாதிரி. சொன்ன சொல் தவறி நடந்தாயானல் உன்னைக் கடுமையாகத் தண்டிப்பேன்'' என்ருர் அந்தப் பாக்கெட்டை அவனிடம் திருப்பிக்கொடுத்துக்கொண்டே...

அன்றுமாலையில் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்துமஸ் மரத்துக்கு அருகே மைக்கேலின் பாட்டி நாற்காலியில் அமர்ந்திருந்தாள். அப்பாவும்தான். மைக்கேல் பாட்டியின் மடியில் அந்தப் பாக்கெட்டை வைத்தான். பாட்டி அதைச் சுற்றியிருந்த பிளாஸ்டிக் உறையை அகற்றினள். அவள் நடுங்கும் விரல்கள் அதனுள்ளிருந்த பொருளைத் தடவி உணர்ந்து கொண்டது. பார்வையற்ற அவள் கண்களிலிருந்து கண்ணீர் உருண்டு விழுந்து சிதறியது.

''மைக்கேல் கண்ணு.... ரொம்ப நன்றி! உன்னோட மௌத் ஆர்கானிலிருந்து இசை எழும்பவேயில்லையே என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அதன் காரணம் இப்போது புரிகிறது!''

''இது என்ன என்று உன்னல் சொல்ல முடியுமா பாட்டி?'' மைக்கேல் கேட்டான்.

''கர்த்தரின் உபதேசங்கள் உள்ள புத்தகம் இது... பைபிள்!'' அவள் விரல்கள் ஒரு பக்கத்தைப் புரட்டின. அதிலிருந்து படிப்பது போல் அவள் வாய் முணுமுணுத்தது.

''நான் குழந்தையாக இருந்தபோது...'' மைக்கேல் தன் பாட்டியின் தோள் வழியாகப் பார்த்தான். பைபிளின் அந்தப் பக்கங்களில் உள்ள வரிகளை அவன் பாட்டிக் கூறிக் கொண்டிருந்தாள். ஆனல் அவள் அதைப் பார்த்துப் படிக்கவில்லை. படிக்க முடியாது. பழக்கம்தான். அதில் உள்ள வரிகள் எல்லாம் அவளுக்கு அத்துபடி.

பாட்டி சொல்லிக் கொண்டே போனள். ''...ஆகவே விசுவாசம், நம்பிக்கை, அன்பு இவை மூன்றிலும் உறுதியாக நில்லுங்கள். இவை மூன்றிலும் மிக மிக உயர்ந்தது அன்புதான். பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்ற அன்புள்ளம்தான்.''

மைக்கேலின் காதுகளில் எங்கிருந்தோ ஒலிக்கும் மௌத் ஆர்கனின் இசை வெள்ளமாகப் பாய்வது போலிருந்தது. பிறருக்குக் கொடுத்து அவர்களின் மகிழ்ச்சியைக் கண்டு மகிழ்வதிலுள்ள ஆனந்தத்தை; சகையே இன்பம் என்பதைத் தன் மகன் உணர்ந்து கொண்டு விட்டான் என்ற பூரிப்பிலே மைக்கேலின் அப்பாவின் இதயம் நிறைந்தது.



◀ கொட்டுது மழை...

புகைப்படங்கள் :
புன்பத்துறை சுப்ரமணியன்

கொளுத்துது
வெய்யில்! ▬



லீலாவதி

கே. ஏ. தாணு

பாரத நாட்டில் பாஸ்கராச்சாரியார் என்ற ஒரு புலவர் வாழ்ந்து வந்தார். அவரது புலமையின் புகழ் பாரெல்லாம் பரவியிருந்தது. ஜோதிட சாஸ்திரத்தில் அவர் நிபுணர்.

பாஸ்கராச்சாரியாரின் ஒரே மகள் லீலாவதி. அவள் அழகிலும் அறிவிலும் இணையற்று விளங்கினாள். அவள் தந்தையிடமிருந்து சகல சாஸ்திரங்களையும் பயின்றாள். ஜோதிட சாஸ்திரத்தில் கரைகண்ட தந்தை, மகளின் வருங்காலத்தை நினைந்து உருகினார். லீலாவதிக்குத் திருமண பாக்கியம் இல்லையென்றும், அப்படியே நடந்துவிட்டாலும் அவள் விதவையாகி விடுவாள் என்றும் அவள் தந்தை ஜோதிட சாஸ்திரத்திலிருந்து தெளிவாகத் தெரிந்து கொண்டிருந்தார். ஆகையால், அவர் மிகவும் வருந்தினார். எனினும் அவர் திட சித்தத்துடன் அருமை மகள் லீலாவதியின் திருமணத்துக்கென ஒரு சுப முகூர்த்தத்தைத் தேர்ந்தெடுத்தார். ஜோதிட சாஸ்திரத்தின்படி அந்தக் குறித்த நேரத்தில் திருமணம் நடந்துவிட்டால் அவள் சுமங்கலியாகவே இருப்பாள். பாஸ்கராச்சாரியார் தம் மகள் லீலாவதிக்கென ஒரு தகுந்த அழகிய வரனையும் தேர்ந்தெடுத்தார்.


திருமண நாள் வந்தது. சுபமுகூர்த்த வேளையைச் சரியாகத் தெரிந்துகொள்ள பாஸ்கராச்சாரியார் ஒரு வழி செய்தார். ஒரு கிண்ணத்தை எடுத்து அதன் அடிப்பாகத்தில் ஒரு சிறிய துவாரம் போட்டார். பிறகு அக்கிண்ணத்தைத் தண்ணீரில் மிதக்க விட்டார். அத்துவரைத்தின் வழியாகத் தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக நிரம்பிக் கடைசியில் அக்கிண்ணம் தண்ணீரில் மூழ்கிவிடும். அப்படி மூழ்கும் நேரம்தான் சுப முகூர்த்த வேளை. பாஸ்கராச்சாரியார் அவ்வாறு நிகழ்வதற்கு ஏற்ப அத்துவாரத்தை அமைத்திருந்தார். அவ்வேளையில் மாங்கல்யதாரணம் நடைபெற்று விட்டால் எல்லாம் மங்களமாக முடியும்.

கிண்ணம் நீரில் மிதந்தது. எல்லோரும் உன்னிப்பாகக் கவனித்து வந்தார்கள். லீலாவதியும் பார்த்துக்கொண்டே இருந்தாள். ஒரு மணி நேரம் கழிந்தது. ஆனால்கிண்ணத்தில் நீர் நிரம்பவில்லை. பாஸ்கராச்சாரியாருக்கு இது ஒரே மர்மமாகத் தோன்றியது. கூர்ந்து கவனித்ததில் லீலாவதியின் கழுத்திலிருந்த முத்து மாலையிலிருந்து நழுவிய ஒரு முத்து கிண்ணத்தில் விழுந்து அத்துவாரத்தை அடைத்துக்கொண்டிருந்தது. அவர் கணித்து வைத்திருந்த முகூர்த்த வேளை கழிந்துவிட்டதால் திருமணம் தடைப்பட்டது. பாஸ்கராச்சாரியார் தாங்கொணாத் துயரம் அடைந்தார்.

லீலாவதியும் தந்தையின் துயரத்தைக் கண்டு கண் கலங்கினாள். இருந்தாலும் திருமணம் தடைப்பட்டதைப் பற்றி அவள் சிறிதும் வருந்தவில்லை. திருமணம் நடக்காததால் வமிசவிருத்தி ஏற்படாதே என்ற கவலை தந்தையை வாட்டியது. லீலாவதி அவருக்கு ஆறுதல் கூறினாள். 'எங்கள் குலம் இவ்வுலகில் என்றும் நிலையான புகழ் அடையும் விதத்தில் நான் செயற்கரிய செயலைச் செய்கிறேன்' என அவள் தந்தைக்கு உறுதி கூறினாள்.

நாட்கள் உருண்டோடின. லீலாவதி கணித சாஸ்திரத்தின் சந்து பொந்து களையெல்லாம் மிக நுட்பமாக ஆராய்ந்து, பல்லாண்டுகள்வரை அரும்பாடுபட்டு உழைத்து மாபெரும் கணித நூல் ஒன்றை உருவாக்கினாள். அந்நூலைக் கண்டதும் தந்தை ஆனந்த மேலீட்டால் துள்ளிக் குதித்தார். அவள் புகழ் உலகில் நிலைத்து விட்டது.

இன்று பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கற்பிக்கப்படும் கணித பாடம் லீலாவதியின் கணித நூலை அடிப்படையாகக் கொண்டதேயாகும்.




நந்து சுந்து மந்து (19)

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்



16


நந்துவும் சந்துவும் பார்க்காத போது பலகார மூட்டையுடன் மெள்ள நழுவுகிறது மந்து.
ஊருக்கு வெளியிலே உள்ள அந்தப் பாழடைந்த வீட்டிலே தான் அவன் ஒளிஞ்சிருக்கணும். அந்த வழியாத் தானே ஓடிறான்.
கான்ஸ்டபிளின் ஒரு கண் மந்துவின் மீதிருந்தது வீண் போகவில்லை. மந்து தன் தோழனைச் சந்தித்து உணவு மூட்டையைக் கொடுத்த அதே சமயத்தில்....
ஓடாதே. நில்...நில்... சுட்டுடுவேன்.
தப்பி ஓடியவனுக்கு முன்னால் ஒரு செங்குத்தான பாறை அதில் ஏறிவிட்டால் தப்பிவிடலாம். அதற்கு உதவுகிறது மந்து.
ம்... தைரியமா ஏறு... பயப்படாதே. சீக்கிரம் ஏறி வந்துடு தப்பி விடலாம்.
எப்படியும் அந்தப் போலீஸ்காரர் என்னைத் தேடி வருவார். அவரை முட்டாளாக்கித் திசை திருப்பி விட ஒரு வழி செய்யறேன். நீ என்னோட பூட்ஸைப் போட்டுக்கிட்டு உன்னோட கூடாரத்துக்குப் போ, என்ன?
அட, என் காலுக்குச் சரியா இருக்கே.
பயல் இந்த வழியாகத்தான் ஓடி இருக்கிறான். இதோ காலடித் தடங்கள்.
ஐயோ, நீயா?
என்னப்பாது, இந்தக் கான்ஸ்டபிள் நம்மையே சுத்தி சுத்தி வந்துக் கிட்டிருக்காரு?
ம் ஹூம், எனக்கு எதுவுமே தெரியாது. நான் நிரபராதி. என் நண்பன் இந் நேரம் பத்திரமான இடத்திலிருப்பான்.

'சுழல் கோப்பை'

முத்தையா

கேசவன் மனம் வெதும்பினான். ''எப்போதுமே இரண்டாவது ஸ்தானம் தானா? முதல் ஸ்தானத்தைப் பெற வழியே இல்லையா? சே! எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் அவன் தானே முதலில் வருகிறான்? இத்தனைக்கும் அவனை விட நான்தான் அதிகம் பயிற்சி செய்கிறேன்; இருந்தும்...''

மாதவனுடைய விரைவு, சுறுசுறுப்பு, தீட்சண்யமான பார்வை, அன்பான பேச்சு, களையான முகம், இனிமையான குரல் — இவைகளைப் பாராட்டாதவர் அந்தப் பள்ளியில் யாரும் இல்லை. ஒவ்வொரு ஆசிரியருக்கும் அவன் தம் பாடங்களில் அதிக மார்க் வாங்கவில்லையே என்ற வருத்தம் இருந்த போதிலும் அவன் விளையாட்டுத் திறனைக் கண்டு மகிழவே செய்தார்கள். விளையாட்டுக்களைப் பற்றியும், அந்த விளையாட்டுக்களில் பலர் செய்திருக்கும் சாதனைகளையும் 'ரிக்கார்டு'களையும் வேகத்துடன் அவன் சொல்லும்போது நண்பர்கள் உன்னிப்பாக அவன் சொல்வதையே கேட்பார்கள்.

கேசவன் மாதவனைக் காட்டிலும் படிப்பில் கெட்டிதான். அவனுடைய அப்பா ஒரு டாக்டர். அவனையும் நன்றாகப் படிக்க வைத்தார். ஆரம்ப காலத்தில் 'ட்யூஷன்' வைத்து அஸ்திவாரத்தைப் பலப்படுத்தினார். கேசவனிடம் அவருக்குத் தனிப்பாசம், செல்லம் எல்லாம் உண்டு. ஒரே பிள்ளையாயிற்றே!

மாதவன் ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுடைய அப்பாவுக்கு ரயில்வே வேலை. தவிர அவர் ஒரு மாஜி விளையாட்டு வீரர்! 'புலிக்குப் பிறந்தது பூனையாகாது' என்பது போல மாதவனும் ஒவ்வொருவருடமும் 'சாம்பியன்ஷிப்' பட்டத்தையும் அதற்கான கோப்பையையும் பெற்று வந்தான். இது மூன்றும் வருடம். இந்த வருடமும் அவன் வெற்றி பெற்று விட்டால் சுழல் கோப்பை அவன் வசமாகி விடும்.

கேசவன்தான், மாதவன் வருவதற்கு முன்னால் அந்தப் பள்ளியின் சாம்பியன். இரண்டு வருட வெற்றிக்குப் பின், மூன்றும் வருட வெற்றியின்போது சுழல் கோப்பை அந்த வருடம் தன் வசமாகிவிடும் என்ற நினைப்பின் மிதப்பில் கேசவன் இருந்தபோது — மாதவன் வந்து தன் திறமையைக் காண்பித்து அந்த வருட சாம்பியனானான். அன்று வளர ஆரம்பித்த வெறுப்புத் தான் இன்றுவரை கேசவனிடம் நிலைத்து நிற்கிறது.


''மாதவா, நீ மெடிகல் செக்கப் பண்ணிக்கிறாயோ?'' என்று ஒரு நாள் கேட்டான் கேசவன்.

''இல்லேடா. எதுக்கு மெடிகல் செக்அப்? நம்ம உடம்பைப் பத்தி நமக்குத் தெரியாதா?'' என்றான் மாதவன்.

''சேச்சே! அப்படியெல்லாம் சொல்லக் கூடாது மாதவா. அதனால் உனக்குத்தான் தீமை. நமக்குத் தெரியாமல் நோய்க் கிருமிகள் நம் உடம்பில் இருக்கலாமே?''



''அப்படியானால் சரி. செக்-அப் பண்ணிக்கிறேன். எப்போ, கேசவா, உன் அப்பா டாக்டர்தானே? அவர் கிட்டேயே பண்ணிக்கலாமா? எவ்வளவு ஃபீஸ் கேட்பார்?'' என்று சிரித்தபடி மாதவன் கேட்டான்.



''சேச்சே, நமக்குள் எதுக்குடா ஃபீஸ்? எங்க அப்பா கிட்டே நான் சொன்னேன்னு ஃப்ரீயாகவே பார்ப்பார். அதனால் நாளைக்கே வந்துடு மாதவா'' என்று கூறிய கேசவன், மாதவனுடைய சம்மதத்தைப் பெற்றுக் கொண்டான்.

அன்றிரவு கேசவன் தன் அப்பாவிடம் எதைப் பற்றியோ விவாதித்துக்கொண்டிருந்தான்.

மறுநாள் மாதவன் வந்தான். அவனுடைய கள்ளம் கபடற்ற சிரிப்பைக் கண்டு மனம் நெகிழ்ந்தார் டாக்டர்.

''அப்பா, இதோ மாதவன் வந்து விட்டான்'' என்ற கேசவன், ''இவனை செக்அப் பண்ணிண்டிருங்கோ அப்பா. நான் ஒரு நண்பனைப் பார்த்துட்டு வந்துடறேன். நான் இன்னும் ஒரு மணி நேரத்திலே வந்துடறேண்டா மாதவா!'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டான்.

''மாதவா!'' என்று கூப்பிட்டார், டாக்டர்.

''என்ன மாமா?''

''வந்து... என் மகனைப் பற்றி நினைக்கவே எனக்கு வெட்கமாக இருக்கப்பா. உனக்கு மெடிகல் செக்அப் செய்யறப்பவே செஞ்சு உன் உடம்பிலே ரத்தம் கெட்டுப் போயிருக்குன்னு சொல்லச் சொன்னாண்டா அவன்.''

''ஏன் மாமா அப்படிச் சொன்னான்?''

''இந்த வருடமும் நீ ஜெயிச்சுட்டா உனக்கு ரோலிங் கப் போயிடுமாம்.''

''அப்படியா? சரி மாமா. எதுக்கும் நீங்க என்னை செக்அப் பண்ணுங்கோ'' என்று கூறிய மாதவன், அவரிடம் தன் திட்டத்தைச் சொன்னான். அவர் ஏதோ மறுக்கும் தோரணையில் பேச ஆரம்பித்தார். அதற்குள் கேசவன் வந்து விட்டான்.

''என்ன மாதவா முடிஞ்சுடுத்தா?'' என்று மாதவனைக் கேட்டுவிட்டு, தன் அப்பாவை ஒரு மாதிரியாகப் பார்த்தான் கேசவன்.

''முடிஞ்சுடுத்து கேசவா... ஆனால்..'' இழுத்தான் மாதவன்.

''ஆன என்னடா?''

''வந்து, எனக்கு ரத்தம் கெட்டுப் போயிருக்காம், உன் அப்பா சொல்றார்.''

''அப்படியா?'' என்ற கேசவனின் குரல் என்னவோ போலிருந்தது. டாக்டர் 'சடக்'கென்று நிமிர்ந்து மாதவனைப் பார்த்தார்.

மாதவன் தொடர்ந்தான்: ''அதனால் இன்னும் இரண்டு வருஷங்களுக்கு ஓட்டப் பந்தயத்தையே நினைச்சுப் பார்க்கக் கூடாதாம்.''

''ஐயையோ! அப்படியா? உன்னால் எப்படி மாதவா ஓடாமல் இருக்க முடியும்?'' போலியாகப் பரிதாபப்பட்டான் கேசவன்.

''அதற்காக என்ன பண்ண முடியும், கேசவா? முதலில் உடம்பைத் தானே பார்த்துக்கணும்?'' என்று மாதவன் கூறிக் கொண்டிருக்கும்போது கேசவனை அவனுடைய நண்பன் ஒருவன் வந்து கூப்பிட்டான்; கேசவனும் போய்விட்டான்.

அவன் வெளியே ஓடியதும் அது வரை இருதலைக் கொள்ளி எறும்பு போலத் தவித்துக் கொண்டிருந்த டாக்டர், ''மாதவா, என்னப்பா இது?'' என்று பதறினார்.

''கவலைப்படாதீங்கோ, மாமா. நான் இந்த வருஷம் வேறே பள்ளிக்கூடத்திலே சேர்ந்துடறேன். அங்கே நான் முயற்சி செஞ்சு வெற்றி பெறலாம்; இங்கே கேசவன் வெற்றிபெறுவான். ஆனால் மாமா ஒரு வேண்டுகோள்! தயவுபண்ணிக் கேசவன்கிட்ட இப்போதைக்கு இந்த விஷயத்தைச் சொல்லிடாதீங்கோ, ப்ளீஸ்!'' என்று கெஞ்சினான்.

முதலில் மறுத்தவர் அவனுடைய 'ப்ளீஸை'க்காக மனம் இரங்கினார்.

மாதவன் வேறு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஒரு வருடம் முடியப் போகிறது. அவன் இந்தப் பள்ளியில் வந்து சேர்ந்த உடனேயே கேசவனுடைய அப்பா அவர் குடியிருந்த வீட்டிலிருந்து இரண்டு மைல் தள்ளியிருந்த தம் 'நர்ஸிங்ஹோமு'க்கு அருகிலேயே வீடு மாற்றிக் கொண்டார். மாதவனால் அடிக்கடி அங்கு போக முடியவில்லை. இது கேசவனுக்கும் சரி, டாக்டருக்கும் சரி, வெவ்வேறு விதத்தில் நிம்மதியாக இருந்தது.

அன்று மாலை மாதவன் தன் வீட்டில் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது வாசலில் ஒரு கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது. மாதவன் எட்டிப் பார்த்தான். கேசவனின் அப்பா!

''வாங்கோ, மாமா!'' என்று வரவேற்றான் மாதவன்.

''பேசறதுக்கு நேரமில்லை; மாதவா; சீக்கிரம் வா'' என்று கூப்பிட்டபடி மாதவனுடன் காரில் ஏறினார்.


காரில் போகும் போது, ''ஹை ஜம்ப் தாண்டும் போது கேசவனுடைய காலில் ஃப்ராக்சர் ஏற்பட்டுவிட்டது மாதவா'' என்றார் டாக்டர்.

''மாமா!'' பதறினான் கேசவன். ''ஃப்ராக்சரானு அவன் எப்படி மாமா பந்தயங்களிலே கலந்துக்க முடியும்? என் மாமா, நீங்க அவனுக்கு பெரிய ட்ரீட்மெண்ட் கொடுத்தேளா?''

டாக்டரின் கண்கள் பனித்தன. ''என்னால் முடிஞ்சவரைக்கும் பார்த்துட்டேன், மாதவா. அவன் ஆறு மாசம் படுக்கையில்தான் இருக்கணும்'' என்றார் துக்கம் அடைக்க.

'நர்ஸிங் ஹோமி'னுள் கார் நுழைந்தது. மாதவன் உள்ளே ஓடினான். கேசவன் படுக்கையில் இருந்த நிலை கண்டதுமே மாதவனின் கண்களில் நீர் துளிர்த்தது. அக்கம் பக்கம் பாராமல் கேசவனும் 'கோ'வெனக் கதறிவிட்டான். ''என்னை மன்னிச்சுடு மாதவா! அப்பா எல்லாத்தையும் சொன்னார். உன்னை ஓடவிடக் கூடாதென்று நினைத்திருந்த என்னையே ஆண்டவன் ஓட முடியாதபடி செய்துவிட்டார். போட்டியில்தான் திறமை வளரும்; பொறாமையால் அல்ல என்பது புரிகிறது'' என்று அரற்றினான்.

மாதவன் மௌனமாக அவன் எதிரில் உட்கார்ந்தான். அவன் கைகள் [illegible] அணைத்தன, ஆறுதலாக.



டெலிஃபோன்

ஈரை அத்திப்பூ

மம்மி நம்ம டெலிபோனில்
மணி யடிக்குது கேட்கிறேன்
தம்பி நீயும் தொடவேண்டாம்
தவறிக் கீழே விழுந்திடும்
மாமா அங்கே பேசுறார்
மகிழ்வாய்ச் சேதி சொல்கிறார்
சாமா தாத்தா பாட்டியும்
சரளா மாமி கிட்டுவும்
நலமே என்று சொல்கிறார்
'நன்றி' என்று வைக்கிறார்
பலமாய் டயலைச் சுற்றியே
பத்தாம் நம்பர் கேட்கிறேன்
பத்தில் அன்பு அப்பாவின்
பதிலைக் கேட்கப் போகிறேன்
சத்தம் இல்லை ராங்நம்பர்
சரியாய்க் கண்டு பிடிக்கிறேன்
''அப்பா ராமு பேசறேன்
அழகாய் இன்று மாலையில்
தப்பா துடனே புத்தகம்
தமிழில் வாங்கி வரவேண்டும்''
அன்பாய் ஒத்துக் கொள்கிறார்
அகமும் பூரிப் படைகிறேன்
எண்பத் தஞ்சில் என்நண்பன்
என்ன வேண்டும் என்கிறான்
எங்கோ இருக்கும் எல்லோரும்
இணைந்து பேசச் செய்கின்ற
தங்க மான டெலிபோனில்
தம்பி நீயும் கேட்கவா!
புகழ்வோம் இந்த டெலிபோனை
பூரிப் புடனே எல்லோரும்
திகழ்வார் என்றும் கிரஹாம்பெல்
திண்ணம் மக்கள் மனத்துள்ளே !

அஞ்சல் பெட்டி

அழகனூர்

காற்றோடும் மழையோடும்
கதைகள் பேசும்

கடிதத்தை எப்போதும்
வாங்கிக் கொள்ளும்

ஊற்றாகப் பெருமழையும்
உலகில் பெய்தால்

ஒருபோதும் மறவாமல்
கடமை செய்யும்

நடமாட்டம் இருக்கின்ற
இடத்தில் நிற்கும்


நாம்தந்த கடிதத்தை
ஏற்றுக் கொள்ளும்

குடம் குடமாய் மழைபெய்தால்
கவலை வேண்டாம்

கருத்தோடு நனையாமல்
பார்த்துக் கொள்ளும்!

தெர்ஆக்கோ

பண்டிகையும் பட்சணங்களும்



யூல்டின்னர்

பொங்கல், புது வருஷம், தீபாவளி, நவராத்திரி, சிவ ராத்திரி, சதுர்த்தி, கோகுலாஷ்டமி இப்படி ஆண்டு முழுதும் ஏராளமான பண்டிகைகள். பண்டிகை பருவம் என்ருல் உங்களுக்கெல்லாம் கொண்டாட்டம். விதம் விதமான தின்பண்டங்கள் கிடைக்கும் அல்லவா? இதிலும் ஒரு விசேஷம். ஒவ்வொரு பட்சணமும் ஒவ்வொரு பண்டிகைக்குத்தான். மற்ற போது அவை கிடைத்தாலும் அந்தப் பண்டிகைக்கு உரித்தான அதை அப்போது ருசிப்பதில் தான் ஒரு தனி மகிழ்ச்சி. பொங்கல் பண்டிகையின் போது சாப்பிடும் சர்க்கரைப் பொங்கலின் ருசியே தனிதானே? அதே போல் விநாயக சதுர்த்திக் கொழுக் கட்டைக்கும், கார்த்திகைப் பொரிக்கும் தனி மணமும் ருசியும் உண்டு. இதே மாதிரி வேறு தேசங்களிலும் வேறு மதத்தவர்களிடமும் இம் மாதிரியான பழக்கம் உண்டா? மதம், இனம், உணவுப் பழக்கங்கள் மாறுபட்டிருந்தாலும் மனித மனம் ஒன்றுதானே?



மார்ஸிபான்

கிறிஸ்தவர்களின் மிக முக்கியமான பண்டிகை கிறிஸ்துமஸ். பல்வேறு நாடுகளிலும் ஏசு பிரான் பிறந்த நாளான கிறிஸ்துமஸை பல்வேறு வகைகளில் கொண்டாடி மகிழ்கிருர்கள். இதை முன்பே கோகுலத்தில் நீங்கள் படித்திருக்கிறீர்கள். ஏசுக் குழந்தை பிறந்த ஏற்றமிகு நாளைக் கொண்டாடி மகிழும் போது விருந்தும் கேளிக்கையும் இல்லாதிருக்குமா? கிறிஸ்துமஸ் விருந்துக்கு ஒவ்வொரு நாட்டிலும் எப்படி, என்னென்ன பட்சணங்கள் செய்து கொண்டாடுவார்கள்? ஆதி காலத்திலிருந்து நம்மைப் போலவே மேல் நாட்டினரும் சில பழக்க வழக்கங்களை விடாமல் பின்பற்றி வருகிருர்கள்.



ஒப்லாட்டி - வேஃபர்

பண்டைக் காலத்தில் **இங்கிலாந்தில்** 'யூல் டின்னர்' எனப்படும் கிறிஸ்துமஸ் விருந்தில் காட்டுப் பன்றியின் பக்குவப் படுத்தப்பட்ட இறைச்சி விசேஷ இடம்

பெறும். இதில் அதன் தலையை நடுவில் வைத்து அலங்கரித்திருப்பார்கள். இதே மாதிரி மயிலையும் பக்குவப்படுத்தி அலங்காரமாக உணவு மேஜை மீது வைப்பார்கள்.

ஸ்காட்லாந்தில் குடும்பத்தில் ஒருவர் எல்லாருக்கும் முன்னதாக எழுந்து காலை உணவைத் (விருந்து) தயார் செய்வது வழக்கம். இதைப் படுக்கையிலிருந்தபடியே உண்ணுவார்கள். (நாம் தீபாவளியின் போது விடியற்காலையில் ஸ்நானம் செய்து பட்சணம் சாப்பிடுவது போல) ஓட் என்ற தானியத்தினால் கேக்குகள் தயாரிப்பார்கள். குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் 'பான்னக்ஸ்' (Bannocks) எனப்படும் இந்த ஓட் கேக்குகளை நெருப்பின் மேலே பொருத்தப்பட்ட கம்பிகளின் மீது வைத்துப் பக்குவப்படுத்துவார்கள். இப்படி இதைச் சுடும் போது யாருடைய கேக்காவது உடைந்து போகுமானால் அவர்களுக்கு அந்த ஆண்டு துரதிர்ஷ்டமான ஆண்டு என்று நம்புகிறார்கள்.

அமெரிக்காவில் வாழும் **மொரேவியர்கள்** தயாரிக்கும் கிறிஸ்துமஸ் கேக்குகள் மிகவும் பிரசித்தி பெற்றவை காகிதத்தைப் போல் மெல்லியதாகவும் நினைவை விட்டகலாத ருசி மிக்கதாகவும் இருக்கும். இதைப் பல்வேறு உருவங்களிலும் அளவுகளிலும் கிறிஸ்துமஸுக்குப் பல வாரங்கள் முன்பிருந்தே செய்ய ஆரம்பித்து விடுவார்களாம்.

ஜெர்மனியில் ஜிஞ்சர் பிரட் மென் (இஞ்சிச் சாறு சேர்ந்த ரொட்டிகள்) மற்றும் பல்வேறு பொருள்களைப் போன்ற 'குக்கீஸ்' (Cookies) என்ற ரொட்டிகளை கிறிஸ்துமஸ் விருந்துக்குத் தயாரிப்பார்கள். இதற்குப் பெர்னஸி (Pffernuesse) என்று பெயர். பாதாம் மாவிலே சர்க்கரை சேர்த்துக் குழைத்துக் காய்கறிகள், பழ வகைகள், பல்வேறு விநோத உருவங்களைப் போல் செய்து உண்பதற்கு ஏற்றபடிப் பக்குவம் செய்து வைப்பார்கள். இதற்கு மார்ஸிபான் (Marzipan) என்று பெயர். ஜெர்மனி, ஆஸ்திரியா இங்கெல்லாம் இம்மாதிரி உருவங்களில் தின்பண்டங்கள் செய்வது விசேஷம்.

இஸ்ரேல் நாட்டில் உள்ளவர்கள் யூதர்கள். உலகின் பல்வேறு பகுதிகளிலும் யூதர்கள் பரவிக் கிடக்கின்றனர். இவர்களுடைய பண்டிகை ஹானுகா. (Chanukah) இது கிறிஸ்துமஸ் மாதிரி தான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறு யூதக் கூட்டத்தினர் அஞ்சா நெஞ்சுடன் மத சுதந்திரத்துக்காகப் போரிட்டு வெற்றி கண்டதைக் கொண்டாடும் திருவிழாதான் இந்த ஹானுகா. இதை எட்டு நாட்கள் கொண்டாடுகிறார்கள். ஹீப்ரு மாதமான கிஸ்லெவ் (Kislev. Nov-Dec)யில் 25ந் தேதி இது ஆரம்பமாகிறது. இந்தப் பண்டிகையின் போது யூத மக்கள் லாட்கஸ் (Latkes) என்ற ஒரு பணியாரத்தைச் செய்கின்றனர். உருளைக் கிழங்கினால் ஆனது இது. மீன், இறைச்சி, காய்கறிகள், பழங்கள் எல்லாம் கலந்த பட்சணங்களையும் தயாரிப்பார்கள்.



போலந்து நாட்டு மக்கள் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு ஒப்லாட்கி (Oplatki) என்ற பெயரில் வேஃபர்களைத் தயாரிப்பார்கள். இதில் மத சம்பந்தமான காட்சிகளைப் பொறித்து மத குருமார்களின் ஆசிகளையும் பெறுவார்கள். இப்படித் தயாரித்த வேஃபர்களைப் பரிசுப்பொருள்களாக அனுப்புவார்கள். கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள் போலவும் கூட இந்த வேஃபர்களை அனுப்புவதுண்டு.

கிறிஸ்துமஸுக்கு முதல் நாள் மாலை (Christmas Eve) போலிஷ் குடும்பத்தினர் இந்த வேஃபர்களை வைத்துப் பிரார்த்தனை நடத்துவதும் உண்டு. கிறிஸ்துமஸ் இரவில் முதல் நட்சத்திரம் தோன்றியதும் இந்த ஒப்லாட்கி என்ற பட்சணத்தைப் (வேஃபர்) பிட்டு மற்றவருக்கு வழங்கி வாழ்த்துக் கூறி உண்டு மகிழ்வார்கள்.

டர்டே (Turte) என்பது ஒரு விசேஷமான ரொட்டி அல்லது கேக். பல மடிப்புக்களோடு கூடியதாக இருக்கும். குழந்தை இயேசுவை எப்படிப் பல மடிப்புக்களுடைய துணிக்குள் அன்னை மேரி வைத்து அரவணைத்தாளோ அதை இந்த வகை ரொட்டி நினைவுறுத்துவதாக ஐதிகம். கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது டர்டேக்களைத் தயாரித்து உண்டு மகிழ்பவர்கள் **ருமேனியர்கள்.**

செர்பியர்களின் கிறிஸ்துமஸ் கேக்குக்கு செஸ்ட் நிட்ஸா (Chestnitsa) என்று பெயர். இந்தக் கேக்குகளைத் தயாரிக்கும்போது அதில் ஒரு வெள்ளிக் காசை ஏதாவது ஒரு கேக்கினுள் புதைத்து விடுவார்கள். இந்த வெள்ளிக் காசு யாருக்குக் கிடைக்கிறதோ அவர்களுக்கு அந்த ஆண்டு அதிர்ஷ்டமான ஆண்டாக இருக்கும் என்று நம்புகிறார்கள்.

நார்வே நாட்டுக்காரர்கள் யூல் டின்னருக்கு விசேஷமாக அரிசியினாலான புட்டுப் போன்ற ஒரு வகைப் பணியாரம் (புட்டிங்) தயாரிக்கிறார்கள். இதனுள் பாதாம் பருப்பு ஒன்றைப் புதைத்து விடுகிறார்கள். பணியாரத்தை வெட்டிப் பங்கிடும்போது இந்தப் பாதாம் பருப்பு யாருக்குக் கிடைக்கிறதோ அவர்களுக்கு உடனே திருமணமாகிவிடும் என்பது ஒரு நம்பிக்கை.

ஸ்வீடன் தேசத்துக் குழந்தைகள் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களை டிசம்பர் 13ந் தேதியிலிருந்தே ஆரம்பித்து விடுகிறார்கள். அது செயிண்ட் லூசியா நாளாகும். அன்று அதிகாலையில் குடும்பத்தில் உள்ள மூத்த பெண் (அவளுக்கு லூசியா மணமகள் என்று பெயர்) வெள்ளை ஆடை உடுத்தி, தலையில் இலை, கொடிகளினாலான மகுடம் சூட்டியிருப்பாள். அதில் மெழுகுவர்த்திகளை இணைத்து எரிய விட்டிருப்பார்கள். தன் சகோதர சகோதரர்கள் புடைசூழ லூசியா மணப்பெண் பெற்றோர்களைப் போய் எழுப்புவாள், காலை ஆகாரத்துக்கு வரும்படி. அவள் கையில் உள்ள தட்டிலே காவி வண்ணம் பூண்ட லூசியா பன்களும் காப்பியும் தயாராக இருக்கும். இது லூசியா தினக் கொண்டாட்டத்தின் கோலாகலம். ஸ்வீடனில் யூல் விருந்துக்கென்றே அந்த ஆண்டின் மிகச் சிறந்த மீனைப் பிரத்தியேகமாக ஒதுக்கி வளர்ப்பார்கள். அதற்கு மத குருமார் ஆசியும் வழங்குவார்கள். அதை விசேஷமான முறையில் பக்குவம் செய்யும் முறை, ஸ்வீடன் நாட்டு இல்லத்தரசிகளான ஸ்வீடினிகளுக்கு மட்டுமே தெரிந்ததொரு கலை. கிறிஸ்துமஸ் விருந்தின்போது பிரதான பதார்த்தமாக இந்த மீன் உணவை 'லட் ஃபிஷ்' என்ற பெயரில் பரிமாறுவார்கள். ஸ்காண்டிநேவிய நாடுகள் எல்லாவற்றிலுமே கிறிஸ்துமஸ் விருந்துகளில் மீன் முக்கிய இடம் பெறுகிறது. இத்தாலியர்கள் விலாங்கு மீன்களையும், ஸ்பானியர்கள் ப்ரம் எனப்படும் சுத்த நீரில் வாழும் ஒருவகைச் சிறிய மீன்களையும் கொண்டு விருந்து தயாரிப்பதை மிகப் பழமையானதாகக் கருதிக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

கிறிஸ்துமஸ் புனித இரவின் முக்கியத்துவத்தைக் குறிக்க முதல் நாள் மாலையில் 'ஸாலட்' பட்சணம் விசேஷமாகத் தயாரிப்பார்கள் **மெக்சிகோ** நாட்டினர். இதற்கு 'என் ஸாலடா டா லா நோசே ப்யூனு' என்று பெயர். ஏராளமான பலவகைப் பழங்கள், காய் கறிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இதில் வண்ண வண்ண மிட்டாய்களைக் கொண்டு அலங்கரித்திருப்பார்கள்.

குழந்தைகளுக்குக் கொண்டாட்டமாக இன்னுமொரு வேடிக்கையும் உண்டு மெக்சிகோ நாட்டில். பினாடா (Pinata) என்பது எளிதில் உடையக் கூடிய பொருளால் ஆன பெரிய உருவங்கள்—கோமாளி, மாட்டுச் சண்டைக்காரன், கழுதை, கோழி இப்படி. இந்த உருவங்களைத் திறந்தவெளியில் கட்டித் தொங்க விட்டிருப்பார்கள். இதனுள் நிறைய மிட்டாய், சாக்லேட், அல்லது பழங்களை நிரப்பி யிருப்பார்கள். குழந்தைகளின் கண்களைக் கட்டிவிட்டுக் கையில் ஒரு கழியைக் கொடுத்து பினாடாவை உடைக்கும்படி கூறுவார்கள். குழந்தைகள் வெகு நேரம் எங்கெங்கோ கழியை வீசி வீசிக் களைத்துக் கடைசியில் பினாடாவைத் தாக்கி உடைக்கும்போது அவர்கள் தலை மீது அத்தனை தின்பண்டங்களும் அபிஷேகமாகும். அதை எல்லாக் குழந்தைகளும் பகிர்ந்து

உண்ணும் காட்சி மகிழ்ச்சி வெள்ளமாக இருக்குமே!

உக்ரேனியன் இல்லத்தரசி கிறிஸ்துமஸ் மாலைக்குப் புராதனமான மரபுப்படி விசேஷமான விருந்து தயாரிப்பாள். 'ஹோலி சப்பர்' என்ற புனித இரவுச் சாப்பாட்டில் பன்னிரண்டு வகையான உணவு வகைகள் இடம் பெற வேண்டும். இவற்றில் ஒன்றுக்கு குடியா (Kutia) என்று பெயர். குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லாரும் வந்து கூடியதும், பிரார்த்தனைகள் நடத்தப்படும். புதிய ஆண்டுக்கான விருப்பங்கள் வேண்டுதல் செய்து கொள்ளப்படும். பிறகு இல்லத்தரசி குடியாவிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் ஒரு ஸ்பூனில் எடுத்து வீட்டின் மூலை முடுக்குகளில் தூவுவாள் — ''எங்கள் ஆடு மாடு கன்றுகளைத் தீய சக்திகள் பலி கொள்ளாது தடுப்பாயாக'' என்று கூறியபடியே.

செர்பியர்களின் பண்டைக் காலத் தெய்வமான சூரியதேவன் காலப்போக்கில் எப்படியோ கிறிஸ்துமஸ் பழக்க வழக்கங்களோடு கலந்துபோய்; இன்றைய செர்பியன் மொழியில் போஷிட்ச் (Bozhitch) என்ற சூரியக் கடவுளின் பெயர் கிறிஸ்துமஸ் என்றே ஆகிவிட்டது. தங்கள் புராதனக் கடவுளான போஷிட்சைக் கௌரவிக்க ஒவ்வொரு உண்மையான செர்பியனும் கிறிஸ்துமஸ் நாளன்று ரோஸ்ட் செய்த பன்றி இறைச்சியை உண்பது ஒரு சடங்காகவே ஆகிவிட்டது.

பின்லாந்தில் கிறிஸ்துமஸ்ஸுக்கு ஒரு வாரம் முன்பே வீட்டுத் தலைவி ஓட் தானியத்தைக் குத்திப் புடைத்து அரைத்து வைப்பதில் ஈடுபட்டிருப்பாள். அங்கு புனித ஸ்டீபன் நாள்தான் கிறிஸ்துமஸ் தினம். அன்று ஓட் கஞ்சி விசேஷ விருந்துப் பொருள். இதற்கு 'செயிண்ட் ஸ்டீபன்ஸ் டே போரிட்ஜ்' என்று பெயர். பண்டைய மரபு மாறாமல் இன்றும் இதைத் தயாரிக்கிறார்கள்.

ஐக்கிய அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியில் ஒரு சிறிய இன மக்கள் வாழ்கிறார்கள். இவர்களுக்கு **நடுக்கர்**கள் (Shakers) என்று பெயர். இந்தப் பெயர் எப்படி ஏற்பட்டது என்பதை அறிந்தால் வியப்பாக இருக்கும். இவர்களில் ஆணும் பெண்ணும் கிறிஸ்துமஸின்போது மட்டுமே சேர்ந்து அமர்ந்து உண்ணுவார்களாம். நீண்ட மேஜையின் ஒரு பக்கத்தில் ஆண்களும் மறு பக்கத்தில் பெண்களுமாக அமர்ந்து மௌனமாக விருந்துண்பார்கள். விருந்துண்டானதும் அவரவரும் தத்தம் இடத்தில் எழுந்து நின்றுகொள்ளுவார்கள். உடலில் நடுக்கம் ஏற்பட்டால் எப்படி ஆடுவார்களோ அம்மாதிரி நடுங்கியபடியே நடனமாடுவார்களாம். இதற்கு 'ஷேக்கிங் செரிமோனியல் டான்ஸ்' என்று பெயர். இதனாலேயே இவர்களுக்கு 'ஷேக்கர்ஸ்' நடுக்கர்கள் என்ற பெயர் ஏற்பட்டது போலும். கிறிஸ்துமஸ் விருந்துகளிலேயே விநோதமானது இதுதான்.

கிறிஸ்துமஸ் விருந்துகளின் முக்கிய பதார்த்தமாக இடம் பெறுவது வான்கோழி. **அமெரிக்கர்**களின் விசேஷ உணவு வகைதான் வான்கோழி பிரியாணி, வான்கோழி பொரியல் ஆகியவை. இந்த வழக்கத்தை முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு இங்கு குடியேறிய வெள்ளையர்கள் (Pilgrim Fathers) செவ்




விந்தியர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள். பிறகு வேறு நாடுகளுக்கும் இது பரவியது. மெக்ஸிகோ நாட்டில் இந்த வான்கோழி வகை உணவிலே சோள மாவினால் செய்த கேக்கும் வறுத்த மிளகும் கலந்து பரிமாறுவார்கள்.

ஜப்பானியக் குழந்தைகள் ஸான்டா க்ளாஸ் தாத்தாவை ஹோட்டியோஷோ (Hoteiosho) என்பார்கள். ஹோட்டியோஷோ கடவுளுக்குப் பின்னாலும் கண்கள் இருக்கும். இதனால் எல்லாக் காலத்திலும் எல்லாத் திசைகளிலும் எல்லாக் குழந்தைகளையும் அவரால் காண முடியும்.

இந்தியாவில் உள்ள சில கிறிஸ்துவ மடாலயங்களில் கிறிஸ்துமஸ் மரத்தை எப்படி அலங்கரிக்கிறார்கள் தெரியுமா? வாழை மரமே 'கிறிஸ்துமஸ் ட்ரீ'யாக அலங்கரிக்கப்படுகிறது. பண்டிகைக்கு ஏற்ற மரம்தானே! **— விகேயெம்**





பிடில் வித்வான்
"கச்சேரிக்குக் கிளம்பும்போது சகுனம் நன்னா இல்லையே !"
"கடத்துக்குள்ளேயிருந்து தேளுன்னா வரது? கடத்தை வெளியே எடுத்து ரொம்ப நாளாறதோன்னோ. நல்ல வேளை. வயிறு தப்பித்தது !"
"இந்தக் கரடி மாமாக்களுக்கு என்ன பக்தி ! இந்தக் குளிரிலேயும் வெறும் உடம்போட பஜனை பண்ணிண்டு போறாளே !"
சிரிக்கச் சிரிக்க!
சபாக் காரியதரிசி : கச்சேரிக்குப் பக்கவாத்தியம் யாரைப் போடறதுன்னு கேட்டேன். 'யாரை வேணும்னாலும் போடுங்கோ'ன்னு நீங்கதானே சொன்னேள்?
"வர வர ஏண்டா நீ உரிச்ச கோழி மாதிரி ஆயிண்டு வரே?"
"கொஞ்ச நாளா நான் சிக்கன் எலெவன்ஸ் சாப்பிட்டுண்டு வரேன் !"
சாமா
சபரி
கான சபா
"பயலே உன்னே ஓடிப்போய் இலே போட்டாச்சான்னு பார்த்துட்டு வா. ரொம்பப் பசிக்கிறது !"
"இல்லையா? நீங்க பாடிண்டிருக்கிறது சபாக் கச்சேரி, கல்யாணக் கச்சேரி இல்லே !"



இரண்டாம் பாகம்

வீராதி வீரன் தோல்வி அடைந்தானானல் அதை மிக மிக இலேசாக எடுத்துக்கொள்வான். எதிரியின் பராக்கிரமத்தைப் பாராட்டி மகிழும் மனப் பக்குவம் கொண்டிருப்பான் அவன். அடுத்த முறை வெற்றியைத் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்று முழு மூச்சுடன் பாடு படுவான். அறிவாளி தோல்வி கண்டால் அதை அலட்சியமாகவே ஏற்றுக் கொள்வான். 'நம்மைவிடப் படிப்பாளிகள் இருக்கிறார்கள், நாம் கற்க வேண்டியவை இன்னும் எவ்வளவோ இருக்கின்றனபோதும்' என்று அடக்கமாக அமைதி பெறுவான். இவ்விரண்டும் அற்ற தற்புகழ்ச்சிக்காரன், குயுக்திவாதி, குள்ளநரி குணம் படைத்த அரைகுறை ஆசாமிகளுக்குத் தோல்வி ஏற்படுமானல் அதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது. அது மட்டுமல்ல அதனல் ஏற்படும் தாபம், கோபம், வேகம் அவர்களை மட்டுமல்ல, பிறரையுமே பாதிக்கும், பாடாய்ப் படுத்தும். அதற்கு உதாரணம் குண்டோதரன்.

குண்டோதரனை நீங்கள் மறந்திருக்க முடியாதே! குள்ளர்களிலேயே திறமைசாலியும், குயுக்திக்காரனும், பேராசை பிடித்தவனும் குண்டோதரன்தான். ஸ்வர்ண நதியின் சொக்கத் தங்கத்தைக் கொண்டு உலகையே ஆட்டிப் படைக்கலாம் என்று பேராசைப் பட்டான். அவனிடமிருந்து அதைப் பராக்கிரமனும் சத்ருக்னனும் சாதுரியமாகப் பறித்துக் கொண்டு போனதும் அவன் அப்படியே இடிந்து போனன். மாயத் தங்கத்தை அவர்கள் பறித்துக் கொண்டதனல் ஏற்பட்ட இழப்பைவிட தன் இனத்தவர்களின் முன்னிலையில் தன்னைச் சிறுமைப்படுத்தியதைக் குண்டோதரனல் தாங்கவே முடியவில்லை. தோல்வியும் அவமானமும் அவனைச் சுட்டெரித்தன. ஓடினன், ஓடினன் — தன் இனத்தவர்களின் பார்வையே படாத ஓர் இடத்தை நோக்கி ஓடினன். அப்படி ஓடும்போதே 'என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவர்களைப் பழிவாங்கியே தீருவேன்!' என்று சபதமிட்டபடியே ஓடினன்.

நெருக்கமான காடு. சூரியனின் கிரணங்கள்கூடப் புகாத அத்தனை இருள் மண்டிய கானகத்தின் பகுதிக்குப் போனன் குண்டோதரன். இது வரை அங்கு எந்த மனிதரின் காலடியும் பட்டதில்லை. அப்படிப்பட்ட ஒரு தனி இடத்துக்குப் போய்ச் சேர்ந்தான். இருள் சூழ்ந்த அந்தப் பகுதியிலே தான் இருப்பதற்கு ஓர் இடத்தையும் அமைத்துக் கொண்டான். மரங்களையும் கொடிகளையும் வளைத்து வசதியான தொரு குடிசையை உருவாக்கிவிட்டான் குண்டோதரன். கொஞ்சம் கொஞ்சமாக அவன் மனப் புண், அதன் ரணம் ஆறியது. ஆரம்பத்திலிருந்த கோபமும் குரோதமும் தணிந்தன. ஆனலும் தான் வஞ்சிக்கப்பட்டதை அவனல் மறந்துவிட முடியவில்லை.

1

என்ன செய்யலாம், எப்படிப் பழி வாங்கலாம் என்று பல நாள் சிந்தனை செய்தான். காடுமேடெல்லாம் அலைந்து திரிந்தான். இந்தச் சமயத்தில் மாயத்தங்கம் பராக்கிரமனிடமிருந்து சீதனனின் கை மாறிப் போன விஷயமும் அவனுக்

குத் தெரிந்தது. அது மட்டுமல்ல. அந்தக் கொடியவன் சீதளன் பயங்கரமானதொரு மிருக உருவிலே அந்தத் தங்கத்தைக் காத்து வரும் சங்கதியையும் அறிந்தான். இப்போது பராக்கிரமரிடமிருந்த அவன் வன்மம் திசை மாறியது. சீதளனிடமிருந்து தனது அருமைத் தங்கையைச் சிறை மீட்கவே பராக்கிரமர் தன்னை ஏமாற்றி அதைப் பறித்துக் கொண்டு போயிருக்கிறார் என்ற உண்மை அறிந்த போது அவன் கோபத்தின் உக்கிரம் குறைந்தது. ஒரு நிலையில் அவரை மன்னித்து மறக்கவே தயாரானான். ஆனால் மாயத் தங்கத்தை அவனால் மறக்க முடியவில்லை. மறந்து வாழவும் விரும்பவில்லை அவன்.




குண்டோதரன் என்ற அந்தக் கள்ளன் ஒரு குட்டிச்சாத்தானும்கூட. சீதளனை கொடிய மிருகத்தை மாய்த்து அந்த மாயத் தங்கத்தை எப்படியும் அடைந்தே தீருவது என்று இரவு பகல் எந்நேரமும் அதே சிந்தனையாகச் செயல்பட்டான். தன் குடிசைக்கு அருகிலே ஓர் உலைக்களத்தை உருவாக்கினான். பூமியின் அடியிலே எங்கெங்கு என்னென்ன உலோகங்கள் இருக்கின்றன என்பதை அறிந்தவர்களாயிற்றே குள்ளர்கள். அதுவும் குண்டோதரனுக்கோ அவை அத்துப்படி. மிகச் சிறந்த இரும்புத் தாதுவைக் கொண்டு வந்தான். அத்துடன் இன்னும் பல உலோகங்களையும் கூட்டினான். குழம்பாகக் காய்ச்சினான். அது தகதகத்துக் கொதிக்கும் போது அதில் ஏதேதோ பச்சிலைகளின் சாற்றையெல்லாம் கலந்தான். அப்படி உருக்கி உருவாக்கிய இரும்புக் குழம்பிலே ஒரு பெரிய வாளை உருவாக்கினான். அதைச் சம்மட்டி கொண்டு தட்டி நீட்டித் தகதகக்க வைத்தான்.

''உலகிலேயே மிகச் சிறந்ததோர் வாளை உருவாக்குவேன். எதனாலும் யாராலும் உடைக்க முடியாத ஓர் அபூர்வமான வாளைத் தயாரிப்பேன். அப்படியொரு வாளை உருவாக்கியதும் அதை ஒரு நிபந்தனையின் பேரில் நான் சூராதி சூரன் என்று கருதும் ஒரு வீரனுக்குப் பரிசாக அளிப்பேன். அந்த நிபந்தனை — அவ்வீரன் இவ்வாளைக் கொண்டு அந்தக் கொடிய மிருகத்தைக் கொல்ல வேண்டும். இந்த வாளின் மகிமையினால் வலிமையினால் அந்த வீரன் சீதளனைக் கொன்றானானால் அவன் காக்கும் தங்கத்தை யார் எப்படி அடைவது என்பதைப் பிறகு முடிவு செய்வேன். இப்படி எண்ணமிட்ட படியே வாளை உருவாக்கினான் குண்டோதரன். முடிவு பெற்றதும் அதைப் பாறை மீது ஓங்கி வீசினான். அவன் திட்டப்படி அந்தப் பாறை பொடி பொடியாக வேண்டும். வானளாவ வளர்ந்திருக்கும் சாலமரம் ஒரே வீச்சில் சரிய வேண்டும். ஆனால் அந்தோ ! குண்டோதரன் பாறையைத் தாக்கியதும் அவன் உருவாக்கிய வாள்தான் மூன்று துண்டாக உடைந்தது. பட்டபாடெல்லாம் வீணாயிற்று!

குண்டோதரன் மனம் தளரவில்லை. அத்தகையதொரு வாளை உருவாக்கியே தீருவேன் என்று மூர்க்கமுடன் மறுபடியும் உலைக் களத்தைக் கிளறிவிட்டான். உலோகக் கலவை கொதிக்கலாயிற்று. சம்மட்டி கொண்டு தட்டி வாளை நீட்டும் ஒலி தொடர்ந்தது. வாளை உருவாக்குவதும் பரீட்சிப்பதும் அது உடைவதும் வேறு முறைகளைக் கையாண்டு மறுபடி வாளை உருவாக்குவதும்.... இப்படி அவன் செயல் தொடர்ந்து கொண்டே இருந்தது. அவன் குடிசையில் உள்ள உலைக் களமும் எரிந்து கொண்டேயிருந்தது.

இதேபோல் இன்னோர் இடத்திலும் தீ ஜ்வாலை எரிந்து கொண்டே இருந்தது. ஆனால் அது உலைக்களத்துத் தீயல்ல. உக்கிரமானதொரு மிருகத்தின் மூச்சுக் காற்று. குகைக்குள்ளே மாயத் தங்கத்தைக் காத்து வரும் சீதளன் என்ற கொடிய மிருகத்தின் மூச்சுக் காற்றுத்தான் அது. குப் குப் என்று குகை வாயிலிலிருந்து பயங்கரமாக வெளி வரும். அதன் அருகே சென்றவர்கள் யாரும் சாம்பல் ஆகாமல் இருப்பதில்லை. அது வாழும் குகையைச் சுற்றிலும் வெள்ளெலும்புகள் ஏராளமாகச் சிதறிக் கிடந்தன. அதை வெற்றி கொள்ள வந்து மாண்டு போன வீரர்களின் எலும்புகள்தான் அத்தனையும்.



சீதளனை வெற்றி கொள்ள யாராலும் முடியவில்லை. அவன் விடும் அனல் பிழம்பான நெருப்பும் அணையவில்லை. எரிந்து கொண்டே இருந்தது.

மூன்றாவதாக இன்னொரு நெருப்பும் அந்த இமய மலைப் பிராந்தியத்தில் தகதகவென்று எரிந்து கொண்டிருந்தது. பனி மூடிய பகுதியின் நட்ட நடுவே, நீரே நெருப்பாகச் சுடர்விடுவது போல எரிந்து கொண்டிருந்தது. மாரிக் காலத்திலே எங்கும் வெண் பனி பெய்து மூடும். ஆனால் அந்தப் பனியும் இந்த நெருப்பை அணைக்காது. காலம் காலமாக, ஒரே சீராக, கொஞ்சமும் குறையாமல், ஒளி குன்றாமல், எரிந்து கொண்டே இருந்தது அந்த நெருப்பு. அதன் நடுவே ஓர் அழகி படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். ஆம், காந்தருவ மங்கை புவனாவேதான் அவள். பராக்கிரமரின் தண்டனைக்குட் பட்டு மாயத் துயில் கொண்ட அந்த மங்கையைச் சூழ்ந்துதான் அப்படி அந்த மாயநெருப்பு எரிந்து கொண்டிருந்தது. அதனால் அவள் பாதிக்கப்படவில்லை. அவள் உடல் கெடவில்லை. யௌவனம் குறையவில்லை. அவள் கண் விழிக்கவும் இல்லை! அந்தத் தீ வட்டத்தின் அருகே யாராலும் நெருங்கவும் முடியவில்லை. பல் கிட்டும் குளிரிலே, நீர் கல்லாகும் பனி படலத்திலே செந்தீ கொழுந்துவிட்டு எரியும் அதிசயத்தையும் அதன் நடுவே துயிலும் அழகியையும் வெகு தூரத்தில் இருந்தபடியே பார்த்து வியந்தார்கள். அதன் விவரம் புரியாமல் விழித்தார்கள். அருகிலே போய் அவளைத் துயில் எழுப்பி மீட்டு வர முயன்ற சிலர் சாம்பலாகிப் பனித் துகளோடு கலந்தார்கள். அவளைத் தீண்டக்கூடியவன், அவள் துயிலைக் கலைக்கும் தகுதி வாய்ந்தவன் வரும் வரை காந்தருவக் கன்னி புவனா இதே நிலையில் தீத் துயில் கொண்டுதான் இருப்பாள்.

இப்படி மூன்று நெருப்புக்கள் ஓயாமல் எரிந்து கொண்டிருந்தன. இம்மூன்று நெருப்புக்களையும் அணைக்கும் வல்லமை பெற்றவன் வருவானா? அல்லது இனி மேல்தான் பிறக்கப் போகிறானா? பிறந்துவிட்டான். அதோ வந்து கொண்டுமிருக்கிறான்!

குண்டோதரன் குடிசையை நாடி ஒரு கொடியுடல் தள்ளாடித் தடுமாறி முன்னேறிக் கொண்டிருந்தது. உடலோடு ஒரு கையால் எதையோ அணைத்து அழுத்திக் கொண்டிருந்தது அவ்வுருவம். நைந்த உடையிலும் அவ்வுருவத்தின் வனப்பு பளிச்சிட்டது. இளமை கொழிக்கும் எழில் உடல். ஆனால் மரணத்தின் பிடி அவ்வுடலை மெல்ல மெல்ல இறுக்கிக் கொண்டிருக்கிறது என்பதை அவ்வுருவத்தின் வெளிறிய முகமும் வேதனைப் பெருமூச்சும் கூறின.

தடுமாறி விழப் போன அந்தப் பெண்ணை ஓடி வந்து தாங்கிக் கொண்டான் குண்டோதரன். கைத் தாங்கலாக



அவளைத் தன் குடிசையினுள்ளே கூட்டிப் போனான். மரணம் அவள் முகத்திலே வியர்வை முத்துக்களை வாரி இறைத்து விளையாடி இருந்தது. மூச்சே விடமுடியாமல் திணறினாள் அவள். அவளைத் தன் படுக்கையிலே கொண்டு போய்ப் படுக்க வைத்தான் குண்டோதரன். உலைக் களம் கனன்று அங்கு கதகதப்பாக இருந்தது. ஆனாலும் அவள் உடல் குளிரினால் நடுங்கியது.

இயலாத அந்த நிலையிலும் தன் இதயத்தோடு அப்பி அணைத்துக்கொண்டிருந்தாள் அந்தத் துணி மூட்டையை. படுக்கையில் படுத்துச் சற்றே ஆசுவாசப்படுத்திக் கொண்டதும் தன் அணைப்பின் பிடிப்பைச் சற்றே தளர்த்தினாள். அந்த மூட்டை நெளிந்தது. இன்னும் அவன் அவளை ஏதுமே கேட்கவில்லை. கேட்டுத் தெரிந்து கொள்ளும் படியோ, அவள் எதையும் கூறும் நிலையிலோ இல்லையே.

அவள் உடலோடு உடலாக ஒட்டிக் கொண்டாற் போலிருந்த துணி மூட்டை நெளிவதைக் கண்டு குண்டோதரனின் கண்கள் வியப்பால் விரிந்தன. அவள் உயிரின் உயிரே போல் அதனுள்ளே ஒரு சின்னஞ் சிறு சிசு. பிறந்து சில நாட்களே ஆகி இருக்க வேண்டும். இன்னும் கண்களைக் கூடச் சரியாகத் திறக்கவில்லை. குஞ்சுக் கைகள், கொள்ளை அழகு!

''ஐயா, நான் இனிப் பிழைக்க மாட்டேன்'' தட்டுத் தடுமாறித் திக்கித் திணறியபடி பேசினாள் அந்தப் பெண். ''இந்தக் குழந்தையை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும். வீரர்களின் பரம்பரையிலே வந்தவன் இவன். **விஜயன்** என்று பெயரிட்டிருக்கிறேன். இவனை **வீர விஜயனா**க்குவது உங்கள் பொறுப்பு.''

இவ்வளவு பேசியதே அவளுக்குத் தாங்க முடியாத களைப்பாக இருந்தது. கண் மூடித் துவண்டு சரிந்தாள் ஒரு பக்கமாக. அவள் வாய் மெதுவாக 'சத்யன் சத்யன்' என்று முனகிற்று. 'ஆம், அவள் பூங்குழலிதான். கங்காளனின் செல்வ மகள், சத்தியனின் இதயம் கவர்ந்த கானகத்து நறுமலர் பூங்குழலியேதான்! அவள் அணைப்பிலிருக்கும் குழந்தை சத்தியனின் குழந்தை. கங்காளனின் வீட்டிலிருந்து இரவோடு இரவாக ஓடி வந்தார்களே, அந்த ஒரு நாள் வாழ்வின் பரிசாகப் பூங்குழலிக்குச் சத்தியன் அளித்த செல்வம்தான் இந்தச் சின்னஞ் சிறு ஜீவன்.

ஏதுமே பேசாமல் கேட்காமல் மௌனமாக நின்று கொண்டிருந்தான் குண்டோதரன். அந்தப் பெண்ணின் நிலை பரிதாபமாக இருந்தது. அதே போது அவள் தன்னிடம் ஒப்படைக்கும் பொறுப்பை எண்ணிக் கசப்படைந்தான். தனிக் கட்டையாகத் தன் இச்சையாக வாழ்ந்தவன் அவன். குடும்பம் குழந்தைகளைப் பற்றியே எண்ணாதவன். 'இப்படிப்பட்ட எனக்கு இப்படியொரு பந்தமா ?' என்று சிணுங்கியது மனது. தாயின் அணைப்புக் கதகதப்பிலே இருந்த குழந்தை சிரித்தது தானாக. இன்னும் முகம் பார்க்கும் நிலை வரவில்லை. ஆனால் மலர் போன்ற தன் இதழ் விரியச் சிரித்தது குழந்தை. குண்டோதரனை எண்ணியா? அல்லது தான் சாதிக்கப் போகும் மகத்தான செயல்களுக்கு அவன் கருவியாக இருக்கப் போகிறான் என்பதை எண்ணிச் சிரித்ததா ?

பிரமை பிடித்துப் போய் நின்ற குண்டோதரனைக் குழந்தையின் அழுகை தன் நிலைக்குக் கொண்டு வந்தது. கால்களை உதைத்துக் கொண்டு நெளிந்து நெளிந்து முகம் சிவக்க அழுதான் விஜயன். 'இனி இந்த உடலோடு எனக்கு உறவில்லை' என்று கூறுவது போல் இருந்தது அந்த அழுகை. குண்டோதரன் கண் மூடிக் களைத்திருக்கும் அந்தப் பெண்ணின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தான். அவன் கை நடுங்கியது. அவள் கைகளின் நாடித் துடிப்பைச் சோதித்தான். அவன் முகம் வெளுத்தது. அவன் பிடியிலிருந்து நழுவிய பூங்குழலியின் பூங்கரம் பொத்தென்று கீழே விழுந்தது. பூங்குழலி இந்தப் பூலோக வாழ்வை உதறிப் போய் விட்டாள். நடுங்கும் கரங்களுடன் இன்னமும் அவள் அணைப்பில் இருந்த குழந்தை விஜயனை அந்தத் துணியோடு அப்படியே எடுத்து அணைத்துக் கொண்டான் குண்டோதரன். குழந்தையின் அழுகையும் நின்றது.

(தொடரும்)

தெரியுமா ?



2101. குப்பி (Guppy) என்பது ஒரு செவ்விந்திய இனம், ஒரு நாட்டு நாணயம், ஒரு வகை மீன் — இவற்றில் எது சரி ?

2102. நியூபவுண்ட் லாண்ட் கானடா நாட்டின் ஒரு மாகாணமானது எப்போது ?

2103. நில நடுக்கம், அதிர்வு, பூகம்பம் இவைகளை ஆராயும் இயலுக்கு என்ன பெயர் தெரியுமா ?

2104. கிறிஸ்துவ வேதப்படி ஆதி மனிதர்களான ஆதாம், ஏவாள் இருவருக்கும் பிறந்த பிள்ளைகளின் பெயர் தெரியுமா ?

2105. குழந்தை ஏசுவைத் தரிசிக்க மூன்று அறிவாளிகளை நட்சத்திரம் வழி காட்டி அழைத்து வந்ததே அவர்கள் பெயர் தெரியுமா ?

2106. பத்துக் கட்டளைகளை எழுதிய மோஸஸ் நாற்பது பகலும் நாற்பது இரவுகளும் ஒரு மலையில் தங்கினர். அந்த மலையின் பெயர் என்ன?

2107. ஐரோப்பாவில் 1348க்கும் 1357க்கும் இடையே ஒரு பயங்கரமான கொள்ளை நோய் பரவிக் கொடுமை புரிந்தது. அதைச் சரித்திரம் எப்படிக் கூறுகிறது ?

2108. கான்கோலாஜிஸ்ட் (Conchologist) என்பவர் எதை ஆராய்பவர்?

2109. இங்கிலாந்தைக் குறிக்க, 'ஜான் புல்' (John Bull) என்பது போல அமெரிக்காவை உருவகப்படுத்தும் பாத்திரம் எது ?

2110. நமக்கெல்லாம் டி. யூ. ஸி. எஸ். என்றால் திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சௌஸைட்டி என்பது தெரியும். ஆனால் பொதுவாக டி.யூ.ஸி. என்றால் என்ன தெரியுமா ?

2111. மெக்ஸிகோ நாட்டை வெற்றி கொண்ட ஸ்பானியரின் பெயர் என்ன?

2112. முதல் மகாயுத்தத்தின்போது பிரிட்டனின் பிரதமராக இருந்தவர் யார் ?

2113. இஸ்ரேலியர்களுக்கும் அராபியர்களுக்கும் 1966ல் ஒரு யுத்தம் மூண்டது. இதை எப்படி அழைக்கிறார்கள், தெரியுமா ?

2114. பாம்பு நடமாடும்போது அடிக்கடி தனது நாக்கை நீட்டி உள்ளுக் கிழுத்துக் கொள்ளும். இது எதற்காக?

2115. பனி மண்டலப் பிரதேசங்களில் சறுக்கு வண்டிகளை இழுக்கப் பயன்படும் நாய்களுக்கு என்ன பெயர்?

2116. பகலில் நடமாடும் பிராணிகளுக்கு ஒரு விஞ்ஞானப் பெயர் உண்டு. அது என்ன?

2117. முதன் முதலில் டெலிவிஷன் காட்சியைப் பொதுமக்களுக்குக் காட்டியது யார் ?


2118. காற்றடைத்த டயர்களை முதன் முதலில் உபயோகத்துக்கு அறிமுகப்படுத்தியது யார் ?

2119. போஸ்டன் நகரம் அமெரிக்காவின் எந்த மாகாணத்தில் உள்ளது?

2120. மேஜை விரிகுடா (Table Bay)வின் தென்பகுதியில் உள்ள நகரத்தின் பெயர் தெரியுமா ?

2121. பிரான்ஸ் நாட்டின் மிக நீளமான நதி எது ?

தெரியுமே!




விடைகள் : 2101. பிரகாசமான நிறமுடைய உஷ்ணப் பிரதேசத்து மீன் இனம். 2102. கானடாவின் மாகாணமானது 1949ம் ஆண்டில். 2103. ஸீஸ்மாலஜி (Seismology). 2104. கெயின் (Cain), அபெல் (Abel) என்று பெயர். 2105. காஸ்பர் (Casper), மெல்காயர் (Melchoir), பெல்தஸார் (Belthazar). 2106. ஸினாய் (Sinai) மலை. 2107. கருஞ்சாவு (Black Death) என்று வர்ணிக்கிறது. 2108. கடல் சிப்பிகளை (Shells). 2109. அங்கிள் ஸாம் (Uncle Sam). 2110. டிரேட் யூனியன் காங்கிரஸ் என்பதின் சுருக்கமே டி.யூ.ஸி. 2111. ஹெர்னாண்டோ கார்டஸ். 2112. ஹெர்பர்ட் ஹென்றி ஆஸ்க்வித் என்பவர். 2113. ஆறுநாள் சண்டை (Six day war) என்று. 2114. ஸ்பரிசக் கருவியாக (Feeler) இதன் நாக்குப் பயன்படுகிறது. 2115. ஹஸ்கி (Husky) என்று. 2116. டியூர்னல் (Diurnal). 2117. ஜான்லோகி பயர்டு. 2118. ஜே. பி. டன்லப் என்பவர். 2119. மாசாசூசெட்ஸ் மாகாணத்தில். 2120. கேப் டவுன். 2121. லாயர் நதி (The Loire River).

கோகுலத்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. மூரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர் : கே. ஆர். ஆத்மநாதன்.

எல்லா விதத்திலும் சிறந்த பல்புகள்

பிலிப்ஸ்



பிலிப்ஸ் பல்புகள்



சொக்கும் இன்பம் சொட்டும் இனிமை
பலே ஜோர்

பார்லே பாப்பின்ஸ்

பழரச மிட்டாய்கள்—

5 பழரசச் சுவைவகைகள்—
ராஸ்ப்பெர்ரி, அன்னாசி,
எலுமிச்சை, ஆரஞ்சு,
சாத்துக்குடி.



everest/220/PP-tm